## உள்ளடக்கம்


1.அரசாங்க அதிபரது செய்தி ..... 1

2.கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம் ..... 3

2.1 மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு செயற்பணி பெறுமதிகள் ..... 3

2.2 மாவட்ட செயலகத்தின் குறிக்கோள்; ..... 4

2.3 மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகள் ..... 4

3. கிளிநொச்சி மாவட்டத்தின் அறிமுகம் ..... 6

3.1 நிர்வாக எல்லைகள் ..... 6

3.2 வரலாற்று முக்கியத்துவங்கள் ..... 6

3.3 இயற்கை வளங்கள் ..... 7

3.4 வர்த்தக பொருளாதார செயற்பாடுகள் ..... 7

3.5. நீர்ப்பாசன முறைமை ..... 8

3.6 சனத்தொகை விபரம் ..... 13

3.7 மழைவீழ்ச்சி நிலமைகள் ..... 14

3.8 மாவட்டத்தினுடைய அடிப்படைப் புள்ளிவிபரத் தகவல்கள் ..... 15

4. நிறுவன அமைப்பு வரைபடமும் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரமும் ..... 16

4.1 மாவட்ட செயலக அமைப்பு வரைபடம் ..... 16

4.2 மாவட்ட செயலகத்தின் ஆளணி விபரம் ..... 16

5. செயலாற்றுகை ..... 19

5.1பொதுநிர்வாக செயற்பாடுகளின் முன்னேற்றம். ..... 19

5.1.1 நிர்வாகக்கிளையின் செயற்பாடுகள் ..... 19

5.1.2. உள்ளகக் கணக்காய்வுக் கிளை. ..... 19

**5.1.3** வருமான சேகரிப்புச் செயற்பாடுகள் ..... 21

5.1.4 மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களச் செயற்பாடுகள் ..... 22

**5.1.5.** தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை ..... 24

5.1.6 தேர்தல் திணைக்கள செயற்பாடுகள். ..... 26

5.1.7 மாவட்ட பதிவாளர் அலுவலக செயற்பாடுகள் ..... 29

5.1.8 அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் 2018 ..... 31

5.1.9 மோட்டார்போக்குவரத்து திணைக்கள செயற்பாடுகள் ..... 34

5.1.10 ஓய்வூதிய செயற்பாடுகள் ........ 35
5.1.11 தொகைமதிப்பு புள்ளிவிபரக்கிளையின் செயற்பாடுகள். ........ 36
5.1.12 மாவட்ட பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் ........ 39
5.1.13 புலன் விசாரணைப்பிரிவின் செயற்பாடுகள் ........ 41
5.1.14 உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலகின் செயற்பாடுகள் ........ 42
5.1.15. காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் ........ 43
5.2 சமூகசேவைகள் மற்றும் கலாச்சார முன்னேற்றம் ........ 45
5.2.1. கலாச்சாரப் பிரிவின் செயற்பாடுகள் ........ 45
5.2.2 முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகள். ........ 53
5.2.3 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை செயற்பாடுகள் ........ 54
5.2.4 உளவளத்துணை செயற்பாட்டு அறிக்கை ........ 55
5.2.5 மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயற்பாடு ........ 56
5.2.6 நன்னடத்தைசிறுவர் பராமரிப்புசேவைகள் திணைக்களத்தின் ........ 57
5.2.7சமூக சேவைகள் பிரிவின் செயற்பாடுகள் ........ 57
5.2.8 மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகள் ........ 59
5.3 அபிவிருத்தி செயற்பாடுகள் ........ 61
5.3.1மாவட்ட திட்டமிடல் செயலகம். ........ 61
5.3.2 புனர்வாழ்வு அதிகாரசபையின் செயற்பாடுகள் ........ 84
5.3.3 கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடு ........ 87
5.3.4 சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் செயற்பாடு- ........ 89
5.3.5 தொழிற்துறைத் திணைக்களம் செயற்பாடுகள் ........ 89
5.3.6 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள் ........ 91
5.3.7. மாவட்ட விவசாய திணைக்கள பிரிவின் செயற்பாடுகள். ........ 99
5.4. கணக்குச் செயற்பாடுகள் ........ 101
5.4.1 செயற்திட்ட முன்னேற்றம் ........ 101
5.4.2 ஏனைய திணைக்களங்களின் கீழான கணக்குச் செயற்பாடுகள் ........ 103
5.4.3 வருடாந்தக் கணக்குகள் ........ 106

## 1.அரசாங்க அதிபரது செய்தி



2018ஆம் ஆண்டிற்குரித்தான செயற்திறன் மற்றும் கணக்கறிக்கையினை சமர்ப்பிப்பதில் அளவற்ற ஆனந்தம் அடைகிறேன்.

சுமார் 1237.11 சதுரகிலோமீற்றர் பரப்பளவினையுடைய இயற்கை எழில்மிகுந்த கிளிநொச்சி மாவட்டத்தின் மாவட்ட செயலகம் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி எனும் நான்கு பிரதேசசெயலகங்களும் மக்களின் இறையாண்மையினைப் பாதுகாக்கும் வகையிலும் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களுக்கு ஏற்பவும் நவீன தொழில்நுட்பமுறைகளை கையாள்வதினூடாக மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிவருகின்றன.

மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகளில் அதிகமானவற்றை இலத்திரனியல் மயப்படுத்தி அவற்றின் ஊடாக உச்சப்பயன்பாட்டினைப் பெறுவதற்காக e-letter, e-database, e-staff, e-stock, e-rating, e-voucher போன்றவற்றைப் பயன்படுத்தி வருகின்றமை எமது சிறந்த செயற்பாடுகளுள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மாவட்டச்செயலக பயிற்சி அலகின் ஊடாக நிர்வாகம், நிதி, மொழி, தகவல் தொழிநுட்பம், முகாமைத்துவம், e -கிராமஅலுவலர் போன்ற பல்வேறுவகையான பயிற்சி வகுப்புக்களை மாவட்டச்செயலக மற்றும் பிரதேச அலுவலகர்களின் செயற்றிறன்களை விருத்திசெய்யும் நோக்கில் திட்டமிட்டு நடாத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 2018 டிசம்பர் மாதத்தில் எமது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 25,281 குடும்பங்களைச் சேர்ந்த 78,528 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டதுடன் 514 வீடுகள் முழுமையாகவும் 3430 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்தது. அத்துடன் 27 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு ஏறக்குறைய 2500 குடும்பங்கள் அந்நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கான உலர்உணவு மற்றும் சமைத்த உணவு விநியோகிக்கப்பட்டு மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்கு கொண்டுவந்தமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் திணைக்களங்கள் மக்களுக்கு வழங்கி வருகின்ற சேவைகளை மதிப்பீடு செய்து விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்தவிடயமே. குறித்த உற்பத்திதிறன் போட்டியின் 2015/2016 பருவகாலபோட்டியில் முதன் முதலாக பங்கேற்று தேசியரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமையினை ஓர் ஊக்கமாகக் கொண்டு அயராது உழைத்து 2017/2018 பருவகாலபோட்டியில் 2700 இற்கு மேற்பட்ட திணைக்களங்களுடன் போட்டியிட்டு தேசியரீதியில் முதலாமிடத்தினை பெற்றுக் கொண்டமையானது கிளிநொச்சி மாவட்டசெயலகம் மக்களுக்கு வழங்கும் சிறந்த, அர்ப்பணிப்பான காத்திரமான சேவையினை வெளிப்படுத்தி நிற்பதனை நிரூபிக்கப் போதுமானதொன்றாக இருப்பதுடன் எமது மாவட்டத்தினால் வழங்கப்படும் சேவைக்கும், கூட்டுமுயற்சிக்கும் கிடைத்த ஒரு வெற்றியாகவும் அமையப்பெற்று கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேசிய அளவில் பெருமை சேர்த்துள்ளது.

அத்துடன், கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தேவையான அபிவிருத்திப்பணிகள் என்பனவற்றை தரமானதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் நிறைவேற்றுவதற்கு பலவழிகளிலும் ஒத்துழைப்புக்களையும், ஆலோசனைகளையும் வழங்கிய உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு, ஏனைய அமைச்சுக்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுந்தரம் அருமைநாயகம்,
மாவட்ட செயலாளர்,
கிளிநொச்சி.

## 2.கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அறிமுகம்

இம் மாவட்ட செயலகத்தின் செயற்பாடானது 95 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலகங்களாக பிரித்து இலகுவான நிர்வாக கட்டமைப்பை கொண்டதாக விளங்குகிறது.

### 2.1 மாவட்ட செயலகத்தின் தொலைநோக்கு செயற்பணி பெறுமதிகள்

**தொலை நோக்கு**

நவீனமயப்படுத்தப்பட்டமாவட்ட நிரவாகத்தின் ஊடாக பயனுறுதி மிக்க மக்கள் சேவை வழங்கல்

**செயற்பணி**

அரச கொள்கைகளிற்கமைவாக வினைத்திறனை பயன்படுத்தி சிறந்த ஒருங்கிணைப்பின் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் சமூக பண்பாட்டு விழுமியஙகளை உயர்த்தல்

**பெறுமதிகள்**

1. பாகுபாடற்ற நேர்மையான பயனுறுதிமிக்க சேவையை வழங்கல்
2. ஒரே பதவி நிலையில் உள்ள ஊழியர்கள் சமமாக மதிக்கப்படல்
3. சூழலுக்கு நட்பு ரீதியான உற்பத்திகளைப் பயன்படுத்தல்
4. இயலாமை, முதியோருக்கான கண்ணியமான சேவையினை வழங்கல்
5. அலுவலகத்தில் பின்பற்றப்படும் கோட்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்களை ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளலும் பின்பற்றலும்
6. இலத்திரனியல் முறைமையினூடாக பொதுமக்களிற்கு இலகுவான சேவை வழங்குதல

## 2.2 மாவட்ட செயலகத்தின் குறிக்கோள்

- தரவுகளை இலத்திரனியல் மயப்படுத்தல்
- வினைத்திறான வளப்பயன்பாடு
- யுத்தத்தினால் உடல் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரம் மற்றும் இயல்பு நிலையை ஏற்படுத்திக்கொடுத்தல்
- சனாதிபதி செயலகத்தின் தேசிய கொள்கைகளான போதைப்பொருள் தடுப்பு உணவு உற்பத்தி சிறுநீராக நோய்த்தடுப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பவற்றை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்
- மக்களிற்கு இலகுவான சேவையை வழுங்கக்கூடிய வகையில் அலுவலகத்ததை மாற்றியமைத்தல்
- மக்களின் வாழ்க்கைத் தரத்ததை தேசிய வாழ்க்கைத்தரத்துடன் இணைத்தல்
- வறுமையை கணிசமான அளவு குறைத்தல்
- வாழ்வாதார உதவிகள் மூலம் நிறைவான வருமான மட்டத்தை உறுதிப்படுத்தல்

## 2.3 மாவட்ட செயலகத்தின் செயற்பாடுகள்

வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமை

- மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களிற்கான கணினி வலையமைப்புக்களை ஏற்படுத்தல், உள்ளக கணிணி வலையமைப்பு முறைகளையும் வெளியக வலையமைப்புக்களையும் ஏற்படுத்தல்
- உத்தியோகத்தர்கள் தொடர்பான தனிநபர் கோவை பேணல், சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், புகையிரத ஆணைச்சீட்டுகள் வழங்கல், உத்தியோகத்தர்களின் பதவிகளிற்கு தேவையான வகையில் பயிற்சிகளை வழங்கல்.
- ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிற்கான ஓய்வூதிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

தூய பொதுச் சேவைகளை கிராம பிரதேச மாவட்ட பொதுமக்களிற்கு வழங்குவதும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தலும்

- அடையாள அட்டைகள் மோட்டார் வாகன வரி வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்
- பிறப்பு திருமண மற்றும் இறப்பு பதிவுகளை தாமதமின்றி மேற்கொள்வதும் அவற்றின் பிரதிகளை வழங்குதலும்

- சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்
- காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளலும் காணிப்பிரச்சனைகளை தீர்த்து வைத்தலும்
- கலாச்சார விழுமியங்கள் மற்றும் உடல் உளசார் நலம் பேணல்
- கலை கலாச்சார விழாக்களை நடாத்துதல் கலை கலாச்சாரம் சம்பந்தமான போட்டிகளை நடாத்துதல்
- கலாச்சாரம் சம்பந்தமான விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துதல்
- மாவட்ட விளையாட்டு நிகழ்வுகள் மாற்றுத் திறனாளிகளிற்கான விளையாட்டு நிகழ்வுகள் நடாத்துதல்
- சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு ஏதுவான வகையில் சிறுவர்கள் இளைஞர்களிற்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல், உளவள மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள் நடாத்துதல்

கிராம பிரதேச மட்டத்தில் உள்ள மக்களின் கல்வி சுகாதாரம் விவசாயம் போன்றவற்றிற்கு உதவுவதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களிற்கு நிவாரணங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்கல்.

- பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு சுயதொழில் பயிற்சிகளை வழங்கலும் ஊக்குவிப்புக்களை வழங்கலும்.
- முதியோர்களிற்கும் மாற்றுத்திறனாளிகளிற்கும் சில விசேட நோய் உடையோருக்குமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளல்
- அனர்த்த முகாமைத்துவ சேவை பிரிவினால் கிராமிய மட்டங்களில் திடீர் அனர்த்தம் சம்பந்தமான விழிப்புனர்வு கருத்தரங்குகளை நடாத்தல் உடனுக்குடன் அனர்த்த நிவாரண சேவைகளை மேற்கொள்ளல்.
- வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளலும் தேர்தல் ஒருங்கிணைப்பும்.
- விவசாயிகளிற்கான விதைகள், உள்ளீடுகள் விவசாய உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல்.
- வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன மின்சார வசதிகளை ஒழுங்கமைத்தல் வீடமைப்பு திட்டங்களை நெறிப்படுத்தலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கல் மற்றும் மாவட்டத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கமைத்து வழிப்படுத்தல்.

## 3. கிளிநொச்சி மாவட்டத்தின் அறிமுகம்




### 3.1 நிர்வாக எல்லைகள்

வடமாகாணத்தின் மத்தியில் அமைந்திருக்கும் கிளிநொச்சி மாவட்டமானது வடக்கே எல்லையாக யாழ் மாவட்டமும், கிழக்கு தெற்கு எல்லைகளாக முல்லைத்தீவு மாவட்டமும், மேற்கு தெற்கு எல்லைகளாக மன்னார் மாவட்டத்தையும் கொண்டு விளங்குகிறது.

### 3.2 வரலாற்று முக்கியத்துவங்கள்

இலங்கையின் முதலாவது மனிதக்குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக இரணைமடு அடையாளப்படுத்தப்பட்டதன் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தினது வரலாற்று தொன்மை ஆரம்பமாகின்றது. அக்காலத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயம்,வேட்டைத்தொழில், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில்களை மேற்கொண்டதுடன் அவற்றை சேமிக்கும் பழக்கங்களையும் கொண்டிருந்தனர். இம் மாவட்டத்தில் காணப்படுகின்ற இரணைமடுக்குளம் உட்பட நான்கு பாரிய நீர்ப்பாசன குளங்களும் ஐந்து நடுத்தர நீர்ப்பாசன குளங்களும் 394 சிறிய நீர்ப்பாசன குளங்களும் இம் மாவட்டத்தில் அமைந்துள்ளமை மக்களின் தொழில் முறையை

எடுத்தியம்புகிறது. மேலும் தொழில்நுட்பமும் கலைநயமும் பொருந்திய மக்கள் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

இம்மாவட்டத்தின் வரலாற்று பெருமைகளாக உருத்திரபுரம் சிவன் கோயில், புளியம்பொக்கணை நாகதம்பிரான், மண்ணித்தலை புனித அந்தோனியார் ஆலயம், பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம், பொன்னாவெளி சிவன் ஆலயம் என்பவற்றுடன் பூநகரி ஒல்லாந்தர் கோட்டையும் காணப்படுகின்றது.

### 3.3 இயற்கை வளங்கள்

இயற்கை வளங்களாக இரணைமடுக்குளம், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம், வன்னேரிக்குளம் பறவைகள் சரணாலயம் மற்றும் கௌதாரிமுனை கடற்கரை என்பவை விளங்குகின்றன.

### 3.4 வர்த்தக பொருளாதார செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்ட மக்களின் பெரும்பாலானவர்கள் நெற்செய்கையுடன் உப உணவுப்பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு பழமரச் செய்கை மீன்பிடித்தொழில் என்பவற்றை மேற்கொள்கின்றனர்.

இந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் உற்பத்தி செயற்பாடுகள் பின்வருமாறு.

| பயிர் | பயிரிடப்பட்ட பரப்பளவு (Ha) | | உற்பத்தி (Mt) | |
|---|---|---|---|---|
| | பெரும்போகம் 2017/2018 | சிறுபோகம் 2018 | பெரும்போகம் 2017/2018 | சிறுபோகம் 2018 |
| நெல் | 23909 | 754 | 95692 | 6795 |
| மரக்கறி | 1097.5 | 473.5 | 15207 | 6572 |
| மிளகாய் | 280 | 101 | 448 | 1414 |
| வெங்காயம் | 108.5 | 74.5 | 1536 | 886.5 |
| பயறு | 315 | 125 | 473 | 150 |
| உழுந்து | 220 | 06 | 176 | 4.8 |
| கௌபி | 155 | 59 | 155 | 59 |
| நிலக்கடலை | 262 | 149 | 408 | 186.3 |
| **மொத்தம்** | **26347** | **1742** | **114095** | **14796** |

| பயிரிடப்படும் பழ வகை | பயிரிடப்பட்ட பரப்பளவு (Ha) | உற்பத்தி (Mt) |
|---|---|---|
| வாழை | 286 | 4800 |
| பப்பாசி | 59 | 1770 |
| மா | 277 | 1800 |
| தோடை | 15 | 30 |
| எலுமிச்சை | 62 | 275 |
| பலா | 112 | 2240 |
| அன்னாசி | 24 | 192 |
| மாதுளை | 41 | 128 |
| கொய்யா | 49 | 180 |
| கொடித்தோடை | 28 | 138 |
| **மொத்தம்** | **953** | **11553** |

## 3.5. நீர்ப்பாசன முறைமை

இம் மாவட்டமானது அண்ணளவாக 1237.11 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பினையும் அதில் 444.3 சதுர கிலோமீற்றர் நீர்ப்பரப்பினையும் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. பொதுவாக வெப்பநிலை கூடிய பிரதேசமாகக் காணப்பட்டாலும் கூட இங்குள்ள வளம்மிகு குளங்கள், அவற்றின் நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தில் பெரும் விளைச்சலைத் தரக்கூடிய மாவட்டங்களில் ஒன்றாக கிளிநொச்சியும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இதில் பிரதானமாக நோக்குகின்ற போது குளத்து நீரைக் கொண்டு (2ஏக்.அடி) கூடியவிளைச்சலைத் தரக்கூடிய நீர்ப்பாசனமாக இரணைமடு நீர்ப்பாசனம் தேசிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படையில் கிளிநொச்சிமாவட்டமும் ஓர் விவசாய மாவட்டமாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது. இங்கு 7 ஆற்றுப்படுக்கைகள் காணப்படுகின்றன.

| ஆற்றுப்படுக்கையின் பெயர் | நீரேந்துப்பரப்பு |
|---|---|
| கலகலப்பாறு | புதுமுறிப்புகுளம் |
| பிரமந்தலாறு | பிரமந்தலாறுகுளம் |
| கனகராயன் ஆறு | இரணைமடுகுளம் |
| நெத்தலி ஆறு | கல்மடுகுளம் |
| பல்லவராயன்கட்டு | கரியாலைநாகபடுவான் |
| மண்டக்கல் ஆறு | வன்னேரிகுளம் |
| அக்கராயன் ஆறு | அக்கராயன் குளம் |

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நான்கு பாரியகுளங்கள் சார்ந்த நீர்ப்பாசனத் திட்டங்களும், ஐந்து நடுத்தரக் குளம் சார்ந்த நீர்ப்பாசனத் திட்டங்களும் காணப்படுகின்றது. இரணைமடு, கல்மடு, அக்கராயன், கரியாலைநாகபடுவான் ஆகிய பாரிய குளங்களிலும் கனகாம்பிகை, புதுமுறிப்பு, பிரமந்தலாறு, வன்னேரி ஆகிய நடுத்தரக் குளங்களிலும் நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை யாவும் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முகாமை செய்யப்பட்டு நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது.

| தொ. இல | குளத்தின் பெயர் | பிரதேச செயலர் பிரிவு | நீரேந்து ஆற்றுப்படுக்கை | நீரேந்து பரப்பு (சது. மைல்) | கொள் ளளவு (ஏக்.அடி) | நீர் வழங் கல் பரப்பு (ஏக்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | இரணைமடு | கரைச்சி | கனகராயன் ஆறு | 227 | 120,000 | 21,985 |
| 2 | கனகாம்பிகை | கரைச்சி | கனகராயன் ஆறு | 10.30 | 1,221 | 260 |
| 3 | புதுமுறிப்பு | கரைச்சி | கலகலப்பு ஆறு | 10.50 | 2,957 | 985 |
| 4 | அக்கராயன் | கரைச்சி | அக்கராயன் ஆறு | 41.20 | 21,200 | 3,355 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | வன்னேரிக்குளம் | கரைச்சி | மண்டகலாறு | 5.00 | 1,713 | 360 |
| 6 | கல்மடு | கண்டாவளை | நெத்தலி ஆறு | 26.50 | 12075 | 3450 |
| 7 | பிரமந்தலாறு | கண்டாவளை | பிரமந்தலாறு | 25.89 | 3,128 | 602 |
| 8 | கரியாலைநாகபடுவான் | பூநகரி | பல்லவராயன்கட்டு ஆறு | 46.00 | 11,791 | 1,505 |
| 9 | குடமுருட்டி | பூநகரி | அக்கராயன் ஆறு | 75.85 | 2950 | 650 |

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத்தையும் விவசாய வளர்ச்சியையும் கருத்திற் கொள்ளும் போது, இரணைமடுக் குளமும் நீர்ப்பாசனத் திட்டமும் முக்கிய கருப்பொருளாக திகழ்வதோடு கிளிநொச்சி வாழ் மக்களின் உயிர் நாடியாகவும் விளங்குகின்றது. மாவட்டத்திலுள்ள 24935 விவசாயக் குடும்பங்களில் 7000 விவசாயக் குடும்பங்கள் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொள்வோராகக் காணப்படுகின்றனர். இது மாவட்டத்தின் மொத்தவிவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கையில் 35% மாகும். மேலும் இரணைமடு நீர்ப்பாசனத் திட்டத்தினைப் பொறுத்தவரையில் நெற்செய்கை மாத்திரமின்றி உப உணவுப் பயிர்களான கௌபி, பயறு, உழுந்து போன்றவையும் குறிப்பிட்டளவு பயிரிடப்பட்டு விவசாய தன்னிறைவை நோக்கிய வகையில் கிளிநொச்சி மாவட்டம் முன்னேற்றப்பாதையில் செல்கின்றமையை தற்போது அவதானிக்க முடிகிறது. மேலும் 464 குளங்கள் கமநலசேவை திணைக்களத்தால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அத்துடன் உவர் நீர்த்தடுப்பணைத் திட்டங்களும் பூநகரிபகுதியில் காணப்படுகிறது. இதன் நோக்கம் கடல் நீர் உட்புகுவதை தடுப்பதோடு வெள்ள நீரை வெளியேற்றுவதற்குமாக கட்டப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் அனைத்தும் கடந்த 30 ஆண்டுகளாக எமது பிரதேசத்தில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டு இயங்க முடியாத நிலையில் காணப்பட்டது. எனினும் மீள்குடியேற்றத்தின் பின் மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காக பலதிட்டங்கள் பலமில்லியன் முதலீடு செய்யப்பட்டு புனரமைப்பு செய்யப்படுகிறது..
கல்மடு மீள்நிர்மாணம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களில் முதன்மை பெறுகிறது. கடும் யுத்தம் நடைபெற்ற 2009 ம் ஆண்டுகாலப் பகுதியில் உடைக்கப்பட்ட குளம் 2010 ம் ஆண்டளவில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2011 ம் ஆண்டில் 115 மில்லியன் ரூபா செலவில் 1025 குடும்பங்கள்

பயன்பெறும் வகையில் இத்திட்டம் புனரமைக்கப்பட்டது. இக்குளம் 2012ம் ஆண்டே முழுக்கொள்ளளவுக்கு நீர்பிடிக்கப்பட்டு சிறுபோகம் 3450 ஏக்கர் அளவு விஸ்தீரணத்தில் செய்யப்பட்டு மீள்குடியேற்றத்தை வலுப்படுத்தியது. தற்பொழுது மக்கள் இரு போகங்களும் பயிர் செய்யக்கூடியதாக காணப்படுகிறது.

இவ்வகையில் புதுமுறிப்பு குளம், பிரமந்தலாறு குளம் கரியாலை நாகபடுவான், வன்னேரிக்குளம், அக்கராயன் குளம் ஆகிய குளங்களும் அரச மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் மூலம் புனரமைப்பு செய்யப்பட்டு அதன் பயனை மக்கள் பெற்று வருகின்றனர்.

## மழைவீழ்ச்சி

| தொ.இல | நிலையத்தின் பெயர் | ஆண்டு | மொத்தமழைவீழ்ச்சி | மாதாந்த மழைவீழ்ச்சி (மி.மீ) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தை | மாசி | பங்குனி | சித்திரை | வைகாசி | ஆனி | ஆடி | ஆவணி | புரட்டாதி | ஐப்பசி | கார்த்திகை | மார்கழி |
| 1 | இரணைமடு | 2018 | 1755.5 | 3.0 | 2.5 | 30.0 | 4.5 | 226 | - | 22.0 | - | 55.4 | 453.8 | 463.0 | 485.5 |
| | | 2017 | 1,351.3 | 76.1 | 22.3 | 209.9 | 36.5 | 51.0 | 6.0 | 2.0 | 50.0 | 166.5 | 107.5 | 487.0 | 136.5 |
| 2 | அக்கராயன் | 2018 | 1391.6 | 10.3 | 10.5 | 32.4 | 49.7 | 176.2 | - | 81.8 | - | 73.2 | 320 | 349.7 | 275.8 |
| | | 2018 | 1755.5 | 107.1 | 16.4 | 213.5 | 4.7 | 65.5 | 15.2 | 0.0 | 27.5 | 91.3 | 160.6 | 367.6 | 104.1 |
| 3 | கரியாலைநாகபடுவான் | **2017** | **1,351.3** | **8.6** | **0.0** | 50.3 | 66.2 | 70.5 | - | - | - | 74.7 | 290.8 | 352.4 | 262.1 |
| | | **2018** | **1391.6** | **114.9** | **17.8** | 63.9 | 0.0 | 28.4 | 0.0 | 0.0 | 0.0 | 89.9 | 136.3 | 393.3 | 81.1 |

## பயிர்ச்செய்கை அளவுகளும் குளத்தின் நீர்மட்ட அறிக்கைகளும்

| குளத்தின் பெயா | பயிர்ச் செய் கை பரப்பு (ஏக்கா ) | 2018/2019 பெரும் போகத்தில் செய்யப்பட்ட பயிர்ச்செய் கை (ஏக்கர்) | 22018 சிறுபோக த்தில் உத்தேசிக் கப்பட்ட பயிர்ச்செய் கை (ஏக்கர்) | குளத்தின் நீர் மட்டம் 31.12.2018 | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | வான் மட்டம் | நீர் மட்டம் | |
| இரணைமடு | 21,985 | 20,882 | 1,812 | 36’-00” | 35’-07” | பெரும்போக பயிர்ச்செய்கைநெல் விதைக்கப்பட்டுள்ளது |
| கனகாம்பிகை | 260 | - | 260 | 10’-06” | 10’-06” | |
| புதுமுறிப்பு | 850 | 985 | 250 | 19’-00” | 19’-01” | பெரும்போக பயிர்ச்செய்கை நெல் விதைக்கப்பட்டுள்ளது |
| அக்கராயன் | 3,417 | 3,417 | சிறுபோகம் இல்லை | 24’-00” | 24’-11” | பெரும்போக பயிர்ச்செய்கை நெல் விதைக்கப்பட்டுள்ளது |
| வன்னேரிக்கு ளம் | 346 | 360 | சிறுபோகம் இல்லை | 09’-06” | 09’-06” | பெரும்போக பயிர்ச்செய்கை நெல் விதைக்கப்பட்டுள்ளது |
| கல்மடு | 3,450 | 3,450 | சிறுபோகம் இல்லை | 24’-00” | 24’-00” | பெரும்போக பயிர்ச்செய்கை நெல் விதைக்கப்பட்டுள்ளது |
| பிரமந்தலாறு | 602 | - | 450 | 12’-00” | 12’-01” | |
| கரியாலைநாக படுவான் | 1,505 | 1,505 | சிறுபோகம் இல்லை | 10’-00” | 10’-02” | பெரும்போக பயிர்ச்செய்கை நெல் விதைக்கப்பட்டுள்ளது |
| குடமுருட்டி | 680 | 650 | சிறுபோகம் இல்லை | 08’-09” | 08’-01” | பெரும்போக பயிர்ச்செய்கை நெல் விதைக்கப்பட்டுள்ளது .. |

### மாண்புமிகு ஜனாதிபதி விஜயம் 07.12.2018

மாண்புமிகு ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால ஸ்ரீசேன அவர்களால் இரணைமடு நீர்த்தேக்கம் பொதுமக்களின் பாவனைக்காக **07/12/2018** அன்று உத்தியோக பூர்வமாக கையளிக்கபட்டதுடன் இரணைமடு நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளும் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.









## 3.6 சனத்தொகை விபரம்

| இல | பிரதேச செயலர் பிரிவு | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்த ஆட்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | தமிழ் | சிங்களம் | முஸ்லிம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கரைச்சி | 25070 | 78313 | 37845 | 40468 | 24775 | 36 | 259 |
| 2 | கண்டாவளை | 8561 | 26381 | 12731 | 13650 | 8554 | 1 | 6 |
| 3 | பூநகரி | 7692 | 26216 | 13004 | 13212 | 7213 | 1 | 478 |
| 4 | பச்சிலைப் பள்ளி | 4238 | 13560 | 6625 | 6,935 | 4234 | 2 | 2 |
| **மொத்தம்** | | **45561** | **144470** | **70205** | **74265** | **44776** | **40** | **745** |

## 3.7 மழைவீழ்ச்சி நிலமைகள்

### மழைவீழ்ச்சி பரம்பல்

| இல | மாதம் | சராசரி மழை வீழ்ச்சி (மி.மீ) |
|---|---|---|
| 01 | தை | 13 |
| 02 | மாசி | 05.9 |
| 03 | பங்குனி | 54.3 |
| 04 | சித்திரை | - |
| 05 | வைகாசி | 237.3 |
| 06 | ஆனி | - |
| 07 | ஆடி | 58.4 |
| 08 | ஆவணி | 0.6 |
| 09 | புரட்டாதி | 77 |
| 10 | ஐப்பசி | 342.5 |
| 11 | கார்த்திகை | 397.9 |
| 12 | மார்கழி | 464.3 |

### வெப்பநிலை பரம்பல்

| இல | மாதம் | சராசரி வெப்பநிலை (செல்சியஸ்) |
|---|---|---|
| 01 | தை | 29 |
| 02 | மாசி | 30.42 |
| 03 | பங்குனி | 32.79 |
| 04 | சித்திரை | 35.26 |
| 05 | வைகாசி | 33.35 |
| 06 | ஆனி | 33.50 |
| 07 | ஆடி | 33.98 |
| 08 | ஆவணி | 34.10 |
| 09 | புரட்டாதி | 34.30 |
| 10 | ஐப்பசி | 30.79 |
| 11 | கார்த்திகை | 29.58 |
| 12 | மார்கழி | 28.98 |

## 3.8 மாவட்டத்தினுடைய அடிப்படைப் புள்ளிவிபரத் தகவல்கள்

| மாவட்டத்தின் பெயர் | கிளிநொச்சி |
|---|---|
| மாகாணம் | வடமாகாணம் |
| முழு இட விஸ்தீரணம் | 1237.11 சதுர கி.மீ |
| பிரதேச செயலக பிரிவுகளின் எண்ணிக்கை | 04 |
| கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | 95 |
| கிராமங்களின் எண்ணிக்கை | 354 |
| வாக்கெடுப்பு பிரிவுகளின் எண்ணிக்கை | 100 |
| பிரதேச சபைகளின் எண்ணிக்கை | 03 |
| அமைச்சின், மாவட்டச் செயலரின் கீழ் இயங்கும், அரச விடுதிகளின் எண்ணிக்கை | 16 |
| வலயக்கல்விப்பணிப்பாளர்களின் எண்ணிக்கை | 01 |
| பாடசாலைகளின் எண்ணிக்கை | 104 |
| கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை | 31969 |
| கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை | 2050 |
| பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 09 |
| மாகாணசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 04 |
| உள்ளூர் அதிகாரசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 37 |
| சனத்தொகை | **144470** |

# 4. நிறுவன அமைப்பு வரைபடமும் அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரமும்

## 4.1 மாவட்ட செயலக அமைப்பு வரைபடம்



## 4.2 மாவட்ட செயலகத்தின் ஆளணி விபரம்

## மாவட்ட செயலகம்: கிளிநொச்சி

| கிளிநொச்சி மாவட்டம் | | | | |
|---|---|---|---|---|
| 31.12.2018ல் அனுமதிக்கப்பட்ட மற்றும் வெற்றிடமாகவுள்ள ஆளணி பற்றிய விபரங்கள் மாவட்ட செயலகம் | | | | |
| வகை | சேவை/ தரம்/ மட்டம் | அனுமதிக் கப்பட்ட ஆளணி | தற்போ துள்ள ஆளணி | வெற் றிடம் |
| அரசாங்க அதிபர் | SLAS Special | 1 | 1 | 0 |
| மேலதிக அரசாங்க அதிபர் | SLAS I | 2 | 1 | 1 |
| பிரதம கணக்காளர் | SLAcs I | 1 | 1 | 0 |
| பிரதம கணக்காய்வாளர் | SLAcs I | 1 | 1 | 0 |
| உதவி மாவட்ட செயலாளர் | SLAS II/III | 1 | 1 | 0 |
| கணக்காளர் | SLAcs II/III | 1 | 1 | 0 |
| பொறியியலாளர் | SL.EngSII/ III | 1 | 1 | 0 |
| நிர்வாக உத்தியோகத்தர் | PMAS Supra | 1 | 0 | 1 |
| மொழிபெயர்ப்பாளர் | II/I | 2 | 0 | 2 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLICTS 2/II/I | 1 | 01 | 0 |
| பாதீட்டு உதவியாளர் | Asso Officer III/II/I | 1 | 0 | 1 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | DOS III/II/I | 20 | 23 | -3 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS III/II/I | 2 | 0 | 2 |
| படவரைஞர் | SLTS III/II/I | 1 | 0 | 1 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | P.M.A I,II,III | 34 | 31 | 03 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | SLICTS 3/III/II/I | 2 | 0 | 2 |
| தொழில்நுட்ப உதவியாளர் | Departmental III//II/I | 2 | 02 | 0 |
| சாரதி | CDS III/II/I | 09 | 07 | 02 |
| விடுதிக்காவலாளி | Departmental III//II/I Spc | 1 | 0 | 1 |
| மின்சார அலுவலர் | Departmental III//II/I Spc | 1 | 0 | 1 |
| அலுவலக பணி உதவியாளர் | OES III/II/I SPC | 12 | 12 | 0 |
| காவலாளி | OES III/II/I SPC | 1 | 1 | 0 |
| **மொத்தம்** | | **98** | **84** | **14** |

## ஆளணி விபரம் : பிரதேச செயலகங்கள்- கிளிநொச்சி மாவட்டம்

| 31.12.2018இல் அனுமதிக்கப் பட்ட மற்றும் வெற்றிடமாகவுள்ள ஆளணி பற்றிய விபரங்கள் 4 பிரதேச செயலகங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வகை** | **சேவை/ தரம்/ மட்டம்** | **அனுமதிக் கப்பட்ட ஆளணி** | **தற்போதுள்ள ஆளணி** | **வெற்றிடம்** |
| பிரதேச செயலாளர் | SLAS I | 4 | 3 | 1 |
| உதவிப் பிரதேச செயலாளர் | SLAS III | 4 | 4 | 0 |
| கணக்காளர் | SLAcs II/I, II/II | 4 | 4 | 0 |
| நிர்வாக உத்தியோகத்தர் | PMA Supra | 4 | 0 | 4 |
| கிராம சேவையாளர்(நிர்வாகம்) | **GS Supra** | 4 | 2 | 2 |
| மொழி பெயர்ப்பாளர் | **TS** | 4 | 0 | 4 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | DOS III/II/I | 20 | 22 | -2 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS III/II/I | 4 | 0 | 4 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் | PMAS III/II/I | 89 | 82 | 7 |
| கிராம சேவையாளர் உத்தியோகத்தர் | | 95 | 80 | 15 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | SLICTS 3/III/II/I | 4 | 0 | 4 |
| தொழில் நுட்ப உதவியாளர் | Departmental | 4 | 4 | 0 |
| சாரதி | CDS III/II/I | 8 | 8 | 0 |
| அலுவலக பணியாளர்/ காவலாளி | OES III/II/I | 26 | 25 | 1 |
| **மொத்தம்** | | **274** | **234** | **40** |

# 5. செயலாற்றுகை

## 5.1 பொதுநிர்வாக செயற்பாடுகளின் முன்னேற்றம்.

### 5.1.1 நிர்வாகக்கிளையின் செயற்பாடுகள்

**மாவட்ட செயலக அலுவலர்களின் சுயவிபரக்கோவை பேணல் விடுமுறை, புகையிரத ஆணைச்சீட்டுக்கள் வழங்கல் போன்ற நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.**

2018 **ம் ஆண்டு இடமாற்றம் பெற்றவர்கள் புதிதாக வந்தவர்கள் விபரம்.**

| | வந்தவர்கள் | சென்றவர்கள் |
|---|---|---|
| 1. பொறியியலாளர் | 01 | 01 |
| 2 .முகாமைத்துவ உதவியாளர்கள் | 07 | 03 (01 ஓய்வு) |
| 3. அபிவிருத்தி உத்தியோகத்தர் | 04 | 02 |
| 4. அலுவலர் பணியாளர் சேவை | 01 | 02 (01 ஓய்வு) |
| 5. சாரதிகள் | 01 | |

**அக்கிரகார காப்புறுதி** 742 **வாகனங்களுக்கு வழங்கப்பட்டு** 2736486.34 **வருமானம் பெறப்பட்டது.**

### 5.1.2. உள்ளகக் கணக்காய்வுக் கிளை.

**மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளையும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் வினைத்திறன்களையும் விருத்தி செய்து கொள்வதே உள்ளகக் கணக்காய்வுக் கிளையின் முக்கியமான நோக்கமாகும்.**

**உள்ளக கணக்காய்வுக் கிளையினால் இந்தவருடத்தில் மொத்தமாக இருபத்திநான்கு ஐயவினாக்கள் அனுப்பப்பட்டன. அனுப்பப்பட்ட ஐயவினாக்களுக்கான பதில்கள் கிடைக்கப் பெற்றதுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்தவருடம் மிகவும் வினைத்திறமையாக அமைந்தது.**

| விடயம் | மாவட்டச் செயலகம் | பிரதேச செயலகங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | கரைச்சி | கண்டாவளை | பூநகரி | பச்சிலைப்பள்ளி |
| முன் வைக்கப்பட்ட அவதானிப்புக்கள் | 07 | 04 | 06 | 02 | 05 |
| முன் வைக்கப்பட்ட அவதானிப்புக்களிற்காக கிடைக்கப் பெற்ற பதில்கள் | 07 | 04 | 06 | 02 | 05 |
| மொத்தமாக பதில் கிடைக்கப் பெறாத அவதானிப்புக்கள் | - | - | - | - | - |

மேலும் ஐயவினாக்களிற்கான பிரதிகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கும் அரச கணக்காய்வுத் திணைக்களம் (மாவட்டச் செயலகம் கிளிநொச்சி)அனுப்பப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வுகளில் தோன்றிய ஐயங்களையும் பிரச்சனைகளையும் தீர்வு செய்யும் முகமாக வருடத்தில் நான்கு முகாமைத்துவ கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது. முதலாவது கூட்டம் கடந்த வருடத்திற்கானதும் ஏனைய மூன்று கூட்டங்களும் இந்த வருடத்திற்குமானதும் ஆகும். முதலாவது கூட்டத்திற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளரும் மூன்றாவது கூட்டத்திற்கு முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரும் பங்குபற்றியுள்ளார்கள்.

| முகாமைத்துவ கணக்காய்வுகுழுக் கூட்டம் | 4 வது காலாண்டு | 1 வது காலாண்டு 2018 | 2 வது காலாண்டு 2018 | 3வது காலாண்டு 2018 |
|---|---|---|---|---|
| மாவட்டச் செயலகம் கிளிநொச்சி | 22.02.2018 | 08.05.2018 | 14.08.2018 | 13.11.2018 |

பிரதேச செயலகங்கள் யாவற்றிலும் இவ்வாண்டிற்கான 3 ஆம் காலாண்டிற்குரிய முகாமைத்துவ கணக்காய்வு குழுக் கூட்டம் மாத்திரமே நடைபெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் செயற்திட்டங்களை பார்வையிட்டு

நோக்கங்களின் வினைத்திறன் பற்றிய அறிக்கைகள் அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது

உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் முறைமைகளினை பலப்படுத்தவும் ஆபத்துக்களை தவிர்க்கவும் கலந்துரையாடப்பட்டது.

- உள்ளகக் கட்டுப்பாடும் ஆபத்தும்
- உள்ளகக் கணக்காய்வு அவதானிப்பும் சீர்செய்தலும்
- அரச கணக்காய்வு ஐயவினாக்கள் மீள்பரிசீலனை செய்தல்
- உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் திறைசேரியினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபங்கள

### 5.1.3 வருமான சேகரிப்புச் செயற்பாடுகள்

| வருமான குறியீடு | வருமான விபரம் | மதிப்பீடு | திரட்டிய விபரம் |
|---|---|---|---|
| 1003 - 07 - 02 | பதிவாளர்நாயக திணைக்களப் பதிவுக் கட்டணம் | | 4,309,908.25 |
| 1003 - 07 - 03 | தனியார் மரப் போக்குவரத்து | | 32,700.50 |
| 1003 - 07 - 99 | பிறவருமானங்கள் | 60,000.00 | 86,971.00 |
| 2002 - 01 - 01 | அரச கட்டடங்கள் மீதான வாடகை | | 1,884,805.38 |
| 2002 - 02 - 99 | வட்டி | 2,100,000.00 | 2,262,188.85 |
| 2003 - 02 - 14 | மோட்டார் வாகன அறவீடு | - | 15,266,780.00 |
| 2003 - 02 - 03 | ஆட்களைப் பதிவுசெய்வதற்கான கட்டணம் | - | 463,150.00 |
| 2003 - 02 - 13 | பரீட்சைக்கட்டணம் | - | 34,900.00 |
| 2003 - 04 -00 | அரச ஊழியர் மோட்டார் வாகன அறவீடு | - | |
| 2003 - 02 - 99 | பிற சில்லறைப் பொருட்கள் | 80,000.00 | 64,202.90 |
| 2003 - 99 - 00 | பிற **வருமானம்** | 1,500,000.00 | 3,522,376.87 |
| 2004 - 01 - 00 | விதவைகள் அனாதைகள் | | 10,112,692.51 |

### 5.1.4 மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களச் செயற்பாடுகள்

தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் ஊடாக மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் தனது இலக்குகளை செயற்படுத்தி வருகின்றது. இத் திணைக்களத்தின் செயற்பாடுகளாக இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல், சுயதொழிலை மேம்படுத்தல் ஊக்கிவித்தல் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளினூடாக தனது இலக்குகளை அடைந்து வருகின்றது. இத் திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஆறு உத்தியோகத்தர்களும் பிரதேச செயலகத்தில் மூன்று உத்தியோகத்தர்களும் கடமையாற்றுகின்றனர்.

**மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை**

- **ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல்**

இந் நிகழ்ச்சி ஊடாக மாணவர்கள் பாடசாலை கல்வியின் போதே தொழில் வாய்ப்பை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் பாடசாலை கல்வியின் பின் கற்க வேண்டிய பயிற்சி நெறி பற்றியும் ஆசிரியர்களினூடாக மாணவர்களுக்கு கொண்டு செல்லுதல் இவ் நிகழ்ச்சியின் நோக்கமாகும். இந் நிகழ்ச்சிக்கு 40 ஆசிரியர்கள் பங்குபற்றியுதுடன் 27700 ரூபா நிதி செலவு செய்யப்பட்டது.

- **தொழில் வழிகாட்டல் மாணவர்களுக்கு**

மாணவர்கள் பாடசாலை கல்வி முடிந்தவுடன் பயிற்சி நெறிக்கு ஈடுபடுத்தல் இந் நிகழ்ச்சியின் நோக்கமாகும் மாணவர்களின் தரத்தை உயர்த்துதல். 1058 மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் நடாத்தப்பட்டது.

- **தொழில் வழிகாட்டல் வேலை தேடுவோருக்கு**

இந் நிகழ்ச்சி வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கானது. இளைஞர் யுவதிகளை தனியார் துறை சுய தொழில் போன்றவற்றில் தொழில் வாய்ப்பை பெற்று ஊக்குவித்தல் ஆகும். 740 வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு விழிப்பூட்டல் செய்யப்பட்டுள்ளது.

- **சுயதொழில் செய்வோருக்கான ஊக்குவித்தல் நிகழ்ச்சி**

இந் நிகழ்ச்சி சுயதொழில் செய்து கொண்டிருப்போருக்கானது சுயதொழிலை எவ்வாறு மேம்படுத்துதல் சந்தைப்படுத்தல் போன்றவைக்கான வழிமுறைகளை விளக்குவதாகும் இந் நிகழ்ச்சியில் 282 பேர் பங்குபற்றினர் 9560 ரூபா செலவு செய்யப்பட்டது..

- **தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி பெற்றோருக்கு**

இந் நிகழ்ச்சியானது பாடசாலை கல்வியின் பின் தமது பிள்ளைகளை பயிற்சி நெறிக்கு அனுப்புதல் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்க ஆர்வமூட்டல் போன்றவை பற்றி பெற்றோருக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு ஆகும். இந் நிகழ்ச்சிக்கு 302 பயனாளிகள் பங்குபற்றியதுடன் 10080 ரூபா செலவு செய்யப்பட்டது.

- **முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி நெறி**

இந் நிகழ்ச்சி தொழில் குழு ஒன்றிற்கு தொழில் விருத்திக்கு தேவையான பயிற்சி அளிப்பதாகும் இந் நிகழ்வில் 30 பேர் பங்குபற்றியதுடன் 21050 ரூபா செலவு செய்யப்பட்டது.‘

- **தொழில் சவாலை வெற்றிகொள்ளல்**

இந் நிகழ்ச்சி வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கானது. தொழிலை தேடும் போதும் நேர்முக தேர்வை எதிர் கொள்ளும் போதும் வெற்றிகரமாக அவ் தொழிலை பெற்றுக்கொள்ளல் பற்றிய விழிப்புூட்டல் ஆகும். இதில் 31 பேர் பயனாளிகள் பங்குபற்றியதுடன் 4750 ரூபா செலவு செய்யப்பட்டது.

- **தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நெறி**

இந் நிகழ்ச்சி சுயதொழில் செய்து கொண்டிருப்போருக்கானது இதில் 92 பேர் பயனாளிகள் பங்குபற்றியதுடன் 20250 ரூபா செலவு செய்யப்பட்டது.

இந் நிகழ்ச்சி வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கானது. தொழிலை தேடும் போதும் நேர்முக தேர்வை எதிர் கொள்ளும் போதும் வெற்றிகரமாக அவ் தொழிலை பெற்றுக்கொள்வதற்கான தொழில் வழிகாட்டல் பற்றியதாகும். இதில் 187 பேர் பயனாளிகள் பங்குபற்றியதுடன் 15000 ரூபா செலவு செய்யப்பட்டது.

இந் நிகழ்ச்சி வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கானது. இந்நிகழ்ச்சியின் ஊடாக நேரடி சுயதொழில் வழங்குதல்.80 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந் நிகழ்ச்சி வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கானது. இந்நிகழ்ச்சியின் ஊடாக வேலை தேடுவோரும் வேலை கொடுப்போரும் சந்தித்து தங்களுக்கான வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியாகும். இதில் 55 பேர் பயனாளிகள் பங்குபற்றியதுடன் 9550.00 ரூபா செலவு செய்யப்பட்டது

நேரடி வேலை வாய்ப்பு 95 பேருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.மாவட்டத்திலுள்ள தொழில் தருனர்களை பதிவு செய்தல் இணையவழி மூலம் பதிவு செய்தல் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தொழில் தேடுவோரை பதிவு செய்தல் அரச அரசசார்பற்ற தனியார் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான வேலைகளுக்கு வேலை தேடுவேரை தொழில் தருனருடன் தொடர்புபடுத்தி விடுதல்.

### 5.1.5. தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

1. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களது பிரச்சனைகளை தீர்த்தல்
2. பிரதேச மாவட்டரீதியாக தொழில்முயற்சியாளர்களை உருவாக்கலும் வலுப்படுத்தலும்

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையானது மாவட்ட பிரதேச ரீதியாக தொழில்முயற்சியாளர்களது பிரச்சனைகளை இனம்கண்டு அவற்றை தீர்த்து வைப்பதுடன் அபிவிருத்தி செய்கின்றது. இதன்போது அரச மற்றும் அரசசார்பற்ற வியாபார நிறுவனங்கள் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளை வழங்குகின்றன.

நோக்கம்

- தொழில் முயற்சியாளர்கள் இணைந்து ஒரு கூட்டமைப்பு உருவாக்கல்
- தொழில் முயற்சியாளர்களது பிரச்சனைகளை தீர்த்தல்
- சிறியமற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களது ஒருங்கிணைவு
- பிரதேச மாவட்டரீதியாக தொழில்முயற்சியாளர்களது பிரச்சனைகளை இனம் காணுதலும் தீர்த்தலும்

| | |
|---|---|
| பிரதேச தொழில்முயற்சியாளர் மன்றம் - பிரதேசசெயலகம் கண்டாவளை<br> | பிரதேச தொழில்முயற்சியாளர் மன்றம் - பிரதேசசெயலகம் பூநகரி<br> |

## பெண் தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிநெறிகள்

- கேக் பயிற்சிநெறி
- கைவினைப்பொருள் பயிற்சிநெறி
- விழிப்புணர்வு செயலமர்வு- கணக்கு பதிவு பயிற்சிநெறி

| | |
|---|---|
| கேக் பயிற்சிநெறி-<br>மாவட்டசெயலகம் கிளிநொச்சி<br> | கைவினைப்பொருள் பயிற்சிநெறி - மாவட்டசெயலகம் கிளிநொச்சி<br> |

| | |
|---|---|
| விழிப்புணர்வு செயலமர்வு கணக்கு பதிவு பயிற்சிநெறி - பிரதேசசெயலகம் பளை<br> | கைவினைப்பொருள் பயிற்சிநெறி - பிரதேசசெயலகம் பூநகரி<br> |
| கைவினைப்பொருள் பயிற்சிநெறி - பிரதேசசெயலகம் பூநகரி<br> | கைவினைப்பொருள் பயிற்சிநெறி - பயிற்சிநெறி - பிரதேசசெயலகம் கண்டாவளை<br> |

### 5.1.6 தேர்தல் திணைக்கள செயற்பாடுகள்.

### வாக்காளர்களின் எண்ணிக்கை – 2018

10 யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் "க" கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் (கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில்) 2018ஆம் ஆண்டு பதிவு செய்யப்படடுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை – 89538

## வாக்கெடுப்பு மாவட்டங்கள்

| இல | பிரதேச செயலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | வாக்கெடுப்பு பிரிவுகளின் எண்ணிக்கை | வாக்காளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கரைச்சி, | 42 | 42 | 45342 |
| 2 | கண்டாவளை | 16 | 18 | 17745 |
| 3 | பூநகரி | 19 | 22 | 15887 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 18 | 18 | 10564 |
| | | 95 | 100 | **89538** |

## உள்ளூராட்சி அமைப்புக்கள்

| இல | உள்ளூராட்சி அமைப்பின் பெயர | உறுப்பினர்களின் எண்ணிக்கை | | | ஆகக்குறைந்த பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | வட்டார ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டியோர | தெரிந்தனுப்பப்பட வேண்டியோர் | மொத்தம் | |
| 1 | பச்சிலைப்பள்ளி | 08 | 05 | 13 | 03 |
| 2 | கரைச்சி, | 21 | 14 | 35 | 08 |
| 3 | பூநகரி | 11 | 07 | 18 | 04 |
| | | 40 | 26 | **66** | **15** |

## வடமாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை

| இல | மாவட்டங்கள் | உறுப்பினர்களின் எண்ணிக் |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 16 |
| 02 | வவுனியா | 06 |
| 03 | மன்னார் | 05 |
| 04 | முல்லைத்தீவு | 05 |
| 05 | கிளிநொச்சி | 04 |
| **மொத்தம்** | | **36** |

## வாக்காளர் தினம் – 2018

எமது மாவட்டத்தில் நடைபெற்ற 2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் தின நிகழ்வுகள் 2018.06.04ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றன. இதில் மக்கள் மத்தியில் வாக்குரிமையின் அவசியத்தை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வூட்டும் நடைபவனியும் பாடசாலை மாணவர்களுக்கிடையில் பாடசாலை மட்டம் மாவட்டமட்டத்தில் பேச்சுப் போட்டிகள் சுவரொட்டிப் போட்டிகள் நடாத்தப்பட்டன. மேலும் மாணவர்களுக்கான வினாடி வினா நிகழ்வும் ஏனைய கலைநிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

## தேருநர் இடாப்பு மீளாய்வு - 2018

2018 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான செயற்பாடுகள் 2018 யூன் 01ம் திகதி சகல பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம அலுவலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஒக்ரோபர் 25ஆம் திகதி மீளாய்வுச் செயற்பாடுகள் யாவும் நிறைவுபெற்று மீளாய்வு செய்யபட்ட 2018ஆம் ஆண்டுக்குரிய தேருநர் இடாப்பானது 2018.10.25ஆந் திகதி கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு.இ.கி அமல்ராஜ் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டது.

## உள்ளூராட்சி சபைகள் தேர்தல் – 2018

2018.02.10 ஆம் திகதி எமது மாவட்டத்திலுள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபை கரைச்சி பிரதேச சபை பூநகரி பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சட்டத்திற்கும் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்களுக்கும் அமைய சிறந்த முறையில் நடாத்தப்பெற்று பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

## தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் விபரம்

| உள்ளூராட்சி அமைப்பின் பெயர | வட்டார ரீதியாக தெரிந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள | | | தெரிந்தனுப்பப்பட்ட உறுப்பினர்கள் | | | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| பச்சிலைப்பள்ளி பிரதேச சபை | 07 | 01 | 08 | 02 | 03 | 05 | 09 | 04 | 13 |
| கரைச்சி பிரதேச சபை | 19 | 02 | 21 | 08 | 06 | 14 | 27 | 08 | 35 |
| பூநகரி பிரதேச சபை | 10 | 01 | 11 | 06 | 03 | 09 | 16 | 04 | 20 |
| மொத்தம் | **36** | **04** | **40** | **16** | **12** | **28** | **52** | **16** | **68** |

## தேருநர் இடாப்பு பிரித்தெடுப்பிதழ்

பொதுமக்களின் பல்வேறு தேவைகளுக்காக தேருநர் இடாப்பு பிரித்தெடுப்பிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பல்கலைக்கழக அனுமதி, நேர்முகத் தேர்வுகள். நட்டஈடு பெற்றுக்கொள்ளல், நீதிமன்றத் தேவை, காணி ஒதுக்கீட்டுச் செயற்பாடுகள் போன்ற பல்வேறு தேவைகளுக்காக கிளிநொச்சி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் 2018ம் ஆண்டில் 60 பிரித்தெடுப்பிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 5.1.7 மாவட்ட பதிவாளர் அலுவலக செயற்பாடுகள்

அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் மாவட்ட அலுவலகமான காணி மாவட்ட பதிவகமும் பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பின் கீழ் பிரதேச செயலகங்களில் மேலதிக மாவட்ட பதிவாளர் கிளையும் இயங்கி வருகின்றன.

வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பான 2018ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை விபரங்கள் பின்வருமாறு

1. **காணி மாவட்ட பதிவக செயற்பாட்டு விபரங்கள்**
   **ஆவணம் பதிவு செய்தல்**

| இல. | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பதிவு செய்யப்பட்ட உறுதிகள் | 2385 |
| 02 | பதிவு செய்யப்பட்ட அரச அளிப்புக்கள் | 495 |
| 03 | பெறப்பட்ட இணைப்பிரதிகள் | 930 |
| 04 | வழங்கப்பட்ட உறுதிப்பிரதிகள் | 196 |
| 05 | வழங்கப்பட்ட சுருக்கப்பிரதிகள் | 987 |
| 06 | வழங்கப்பட்ட அனுமான வயது சான்றிதழ்கள் | 06 |
| 07 | பெறப்பட்ட தேடுதல் விண்ணப்பங்கள் | 01 |
| 08 | அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த பிறப்புக்கள் | 242 |
| 09 | மொழிபெயர்ப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 180 |

| இல. | கட்டண விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | உறுதிப்பதிவு செய்தல் | 241100.00 |
| 02 | உறுதிப்பிரதி சுருக்கப்பிரதி | 280100.00 |
| 03 | தேடுதல் | 500.00 |
| 04 | இணைப்பிரதியில் ஒட்டப்பட்ட முத்திரைப்பெறுமதி | 12664470.00 |
| 05 | மொழி பெயர்ப்பு | 97500.00 |
| 06 | பெறப்பட்ட பி.இ.வி. விண்ணப்பங்களுக்கான கட்டணம் | 687200.00 |

1. **பிரதேச செயலக செயற்பாட்டு விபரங்கள் (கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி)**

| இல. | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பெறப்பட்ட பி.இ.வி. விண்ணப்பங்கள் | 28270 |
| 02 | வழங்கப்பட்ட பிரதிகள் | 37898 |
| 03 | பதியப்பட்ட பிறப்பு | 2722 |
| 04 | பதியப்பட்ட இறப்பு | 732 |
| 05 | பதியப்பட்ட விவாகம் | 753 |
| 06 | அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் | 596 |
| 07 | அனுமதிக்கப்பட்ட காலங்கடந்த பிறப்பு(24) | 498 |
| 08 | பெறப்பட்ட பி.இ.வி. விண்ணப்பங்கள் | 27 |

| இல. | கட்டண விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | பெறப்பட்ட பி.இ.வி. விண்ணப்பங்களுக்கான கட்டணம் | 4,146,200.00 |
| 02 | பெறப்பட்ட காலங்கடந்த பிறப்பு இறப்பு மற்றும் திருத்தம் தொடர்பான கட்டணங்கள் | 58150.00 |
| 03 | திருமண பதிவுக்கட்டணம் | 30450.00 |

### 5.1.8 அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகள் 2018

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் மாவட்டத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு அனர்த்த நிவாரண சேவைகள் ஆகியன செயற்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகானது அனர்த்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை அனர்த்த முன்னாய்த்தம் மற்றும் விழிப்புணர்வு செயற்பாடுகள் அனர்த்த தணிப்பு செயற்திட்டங்கள் மற்றும் மாவட்ட மட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் என்பவற்றை மாவட்டத்தில் மேற்கொண்டு வருகின்றது.

அனர்த்த நிவாரண சேவையானது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நிவாரணங்கள், வரட்சிகால குடிநீர் விநியோகம் மற்றும் அனர்த்தத்தின் போதான சொத்தழிவு உயிர் இழப்புகளிற்கான நட்டஈடுகளை வழங்குகின்றது.

| நிகழ்ச்சி | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு | செலவீனம் | மீதி |
|---|---|---|---|---|
| அனர்த்தமுன்னாய்த்த செயற்பாடுகள் | 10 | 632,266.00 | 618,678.00 | 13,588.00 |
| அனர்த்த விழிப்புணர்வுச் செயற்பாடுகள் | 10 | 169,002.50 | 162,831.50 | 6171.00 |
| அனர்த்த தணிப்புச்செயற்பாடுகள் | 05 | 11,000,000.00 | 9,727,593.27 | 980,000.00 |

### அனர்த்த முன்னாய்த்த செயற்பாடுகள்

அனர்த்த முன்னாய்த்த செயற்பாடுகளாக மாவட்ட, பிரதேச, கிராம மற்றும் பாடசாலை மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம் தயாரித்தல,மாவட்ட பிரதேச மட்ட பருவ கால முன்னாயத்த கலந்துரையாடல், வெள்ள அனர்த்த ஒத்திகை நிகழ்வு, அனர்த்த அவசர கால குள பாதுகாப்பு திட்டம் தயாரித்தல் மற்றும் கிராமமட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் தெரிவு செய்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டது.

### அனர்த்த விழிப்புணர்வும் பயிற்சியும் நிகழ்வு

அனர்த்த பயிற்சியும் விழிப்புணர்வும் செயற்பாடுகளாக மாவட்ட, பிரதேச அரச திணைக்கள உத்தியோகத்தர்கள்இ கிராம மக்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு அனர்த்த பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள்,முதலுவி பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.



முப்படையினருக்கான விழிப்புணர்வு நிகழ்வு



கடற்தொழிலாளர்களிற்கான வழிப்புணர்வு நிகழ்வு



பாடசாலை மாணவர்களிற்கான முதலுதவிப்பயிற்சி

## அனர்த்த தணிப்புச்செயற்திட்டங்கள்

அனர்த்த தணிப்புச் செயற்பாடுகளாக மாவட்ட மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட வெள்ள அனர்த்த தணிப்பு செயற்திட்டம் வரட்சி தணிப்புச் செயற்திட்டம் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் 2018ஆம் ஆண்டிற்கான அனர்த்த தணிப்பு செயற்திட்டமாக பின்வரும் கிராம சேவையாளர் பிரிவில் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| இல | அனர்த்த தணிப்புச்செயற்திட்டங்கள் | செலவுகள் |
|---|---|---|
| 1 | வெள்ள வாய்க்கால் புனரமைப்பு 19ம் மைல் கரியாலைநாகபடுவான்,கிராஞ்சி | 3,419,439.36 |
| 2 | இரதாலைக்குளம் புனரமைப்பும், கல்வெட்அமைத்தலும் தம்பகாமம்,புலோப்பளை | 1,322,140.59 |
| 3 | வெள்ள வாய்க்கால் புனரமைத்தல், ஊரியான்,புன்னைநீராவி, கண்டாவளை | 2,560,000.00 |
| 4 | வெள்ள வாய்க்கால் புனரமைத்தல், பாரதிபுரம் | 970,000.00 |
| 5 | வெள்ள வாய்க்கால் புனரமைத்தல், பள்ளிக்குடா,பரமன்கிராய், மட்டுவில்நாடு கிழக்கு, | 1,456,013.32 |
| | **மொத்தம்** | **9,727,593.27** |

## அனர்த்த நிவாரண சேவைகள் செயற்பாடுகள்

### 2017 ஆண்டு வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்பிற்குள்ளாகிய வீடுகளை புனரமைப்புச் செய்வதற்கான கொடுப்பனவு

| பிரதேச செயலாளர் பிரிவு | பாதிப்படைந்த வீடுகளின் எண்ணிக்கை | மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|
| கரைச்சி | 67 | 3,630,500.00 |
| கண்டாவளை | 124 | 1,550,000.00 |
| பூநகரி | 12 | 715,000.00 |
| பச்சிலைப்பள்ளி | 26 | 2,077,200.00 |
| **மொத்தம்** | **229** | 7,972,700.00 |

### 2018 இல் செய்யப்பட்ட வரட்சி கால குடிநீர் விநியோக விபரம் வருமாறு

| பிரதேச செயலாளர் பிரிவு | பாதிப்படைந்த வீடுகளின் எண்ணிக்கை | | குடிநீர் விநியோகம் | | மொத்த செலவினம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பம் | நபர்கள் | குடும்பம் | நபர்கள் | |
| கரைச்சி | 11,933 | 41,432 | 1,987 | 6,995 | 2,101,971.32 |
| கண்டாவளை | 5,914 | 19,493 | 993 | 3,705 | 1,348,652.67 |
| பூநகரி | 5,832 | 20,194 | 2,252 | 8,172 | 1,800,000.00 |
| பச்சிலைப்பள்ளி | 3,542 | 11,954 | 506 | 1,878 | 590,500.00 |
| **மொத்தம்** | **27,221** | **93,073** | **5,738** | **20,750** | **5,841,123.99** |

## 2018 ஆம் ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவு வழங்கிய விபரம்

| பிரதேச செயலாளர் பிரிவு | வரட்சியால் பாதிப்படைந்தோர் விபரம | | உலர் உணவு விநியோகம செய்யப்பட்ட குடும்பங்கள் | மொத்த செலவினம் (ரூபா |
|---|---|---|---|---|
| | குடும்பம் | நபர்கள் | | |
| கரைச்சி | 11,933 | 41,432 | 11,065 | 76,350,000.00 |
| கண்டாவளை | 5,914 | 19,493 | 5,797 | 39,705,145.00 |
| பூநகரி | 5,832 | 20,194 | 4,227 | 29,121,000.00 |
| பச்சிலைப்பள்ளி | 3,542 | 11,954 | 3,021 | 17,615,000.00 |
| மொத்தம் | 27,221 | 93,073 | 24,110 | 162,791,145.00 |

### 5.1.9 மோட்டார்போக்குவரத்து திணைக்கள செயற்பாடுகள்

கிளிநொச்சி மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாவட்டக்கிளையினால் பொது மக்களிற்கு தேவையான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல், அவர்களின் வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் பெற்று விநியோகித்தல், அவர்களின் வாகனங்கள் தேவைக்கேற்றவாறு பரீட்சித்து பரீட்சிப்பு சான்றிதழ்கள் வழங்குதல் போன்ற சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கடந்த 2018 ஆம் ஆண்டில் பொது மக்களுக்காக வழங்கப்பட்ட சேவைகளாவன

- புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 3880 விண்ணப்பங்களும், ஏற்கனவே சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களால் இலகுரக வாகன நீடிப்புக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 357 விண்ணப்பங்களும், பாரவாகன நீடிப்புக்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட 427 விண்ணப்பங்களுமாக 5638 சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- இவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட புதிய விண்ணப்பதாரர்கள் 3880பேரும், பாரவாகன நீடிப்பு விண்ணப்பதாரர்கள் 407 பேரும், மீள் பரீட்சைகளுக்காக விண்ணப்பித்த 1986 பேரிற்குமாக மொத்தம் 6263

பேரிற்கு எழுத்துப்பரீட்சை நடாத்தப்பட்டது. அவர்களில் சித்தியடைந்த 3943 பேரிற்கு பழகுநர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

- இவ்வாறு பழகுநர் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களும் இலகுரக வாகன நீடிப்பு விண்ணப்பதாரர்களுமாக மொத்தம் 4286பேரிற்கு செயன்முறைப்பரீட்சைகள் நடாத்தப்பட்டு 4902 சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அத்துடன் தலைமையகத்திலிருந்து பெறப்பட்ட 352வாகன இலக்கத்தகடுகள் உரிய உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

- அத்துடன் வாகனங்களின் உடலமைப்பு மாற்றத்திற்காக விண்ணப்பிக்கப்பட்ட 43 பேரின் வாகனங்கள் பரீட்சிக்கப்பட்டு வாகன நிறைச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்றும் பல்வேறு தேவைகளுக்காக வாகனங்கள் பரிசோதிக்கப்பட்டு 76 பரீட்சிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு வழங்கப்பட்ட சேவைகளுக்கான சேவைக் கட்டணமாக ரூபா.15,373,975.00 பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.1.10 ஓய்வூதிய செயற்பாடுகள்

| இல | பிரதேச செயலகம் | குடிசார் ஓய்வூதியம் | | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் | | மொத்த ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்த ஓய்வூதியப் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக் | பெறுமதி | | |
| 01 | பச்சிலைப்பள்ளி | 63 | 1,421352.53 | 40 | 823774.77 | 103 | 2245127.30 |
| 02 | கரைச்சி | 469 | 10490424.47 | 247 | 4787154.40 | 716 | 15277578.87 |
| 03 | பூநகரி | 68 | 1465439.55 | 29 | 563992.14 | 97 | 2029431.69 |
| 04 | கண்டாவளை | 90 | 2048280.50 | 51 | 979532.61 | 141 | 3027843.11 |
| **மொத்தம்** | | **690** | **15425497.05** | **367** | **7154483.92** | **1057** | **22579980.97** |

### 5.1.11 தொகைமதிப்பு புள்ளிவிபரக்கிளையின் செயற்பாடுகள்.

### திணைக்களத்தின் செய்தி

தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களமானது இலங்கையின் தேசிய புள்ளிவிபர அலுவலகமாக விளங்குவதுடன் அரசாங்கத்துக்கு தேவையான புள்ளிவிபரத்தரவுகள் சேகரித்தல், வெளியிடுதல் என்பவற்றிற்கு பிரதான பொறுப்புடையதாகவும் விளங்குகின்றது.

நாட்டின் பல்வேறு துறைகளின் சமூக பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல், வழங்குதல் ஆகிய அதன் பொறுப்பிற்கு மேலதிகமாக புள்ளிவிபர சேவைகள் தேவைப்படும் சகல அரச முகவர்களிற்கும் தொழில்சார் அலுவலர்களை பயிற்றுவித்து பணிக்கமர்த்தலும் அதன் பணியாகும். அத்துடன் புள்ளிவிபர விடயங்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் முகவர்களிற்கு அதன் தொழில்நுட்ப பிரிவுகளினூடாக புள்ளிவிபர ஆலோசனைச்சேவைகளையும் வழங்குகின்றது.

### அறிமுகம்

இந்நாட்டின் சமூக பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல் சீர்முறைப்படுத்தல் பகுப்பாய்வுசெய்தல் வெளியிடல் புள்ளிவிபரக்குறிகாட்டிகளை கணித்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய அரசாங்க முகவர் நிலையமான தொகைமதிப்புப்புள்ளிவிபர திணைக்களத்தை சார்ந்தது. அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல் கொள்கைவகுத்தல் போன்றவற்றிற்கும் இவற்றின் முன்னேற்றங்களை மதிப்பிடல் போன்றவற்றிற்கும் தேவையான தகவல்களை தொடர்ந்தும் இத்திணைக்களம் வழங்குகின்றது.

மேலும் இத்திணைக்களம் நடாத்தும் தொகைமதிப்புக்கள் மாதிரி அளவீடுகளை உள்ளடக்கி வேறுபட்ட மூலகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட பலதரப்பட்ட தகவல்களை உள்ளூர் வெளியூர் முகவர் நிலையங்களின் தேவைகளிற்கு தொடர்ந்து வழங்கி வருகின்றது. சேகரிக்கப்பட்ட இத்தரவுகள் சனத்தொகை விவசாயம் வர்த்தகம் கைத்தொழில் தேசிய வருமானம் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றன.

## திணைக்களத்தின் செயற்பாடுகள்

மாவட்ட மட்டத்தில் திணைக்களத்தின் செயற்பாடுகள் பின்வரும் பரந்த பிரிவுகளை கொண்டிருக்கின்றது.

- தணைக்களத்தால் நடாத்தப்படும் விவசாயத்தொகைமதிப்பீட்டு அளவீடு
- நாட்டின் சமூக பெருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல் கணித்தல் தொடர்பான திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய புள்ளிவிபர வேலைகள்

- விவசாயத் குடித்தனங்களின் அளவீடு

2017ம் ஆண்டு நிரற்படுத்தும் வேலைகள் நடைபெற்று 2018ம் ஆண்டு கணக்கெடுப்பு நடைபெற்று நிறைவடைந்ததுள்ளது.

- **சராசரி நெல்விளைச்சலை மதிப்பீடு செய்வதற்காக ஆண்டுக்கு இரு போகங்களில் நடாத்தப்படும் மாதிரி அளவீடுகள்**

  தொடர் நிகழ்வாக மாவட்டரீதியிலும் தேசிய ரீதியிலும் நெல்விளைச்சளை மதிப்பீடு செய்யும் பணி ஆண்டுக்கு இரு போகங்களில் நடாத்தப்படுகின்றது. நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு இத்தேசிய வேலைத்திட்டம் நிறைவு செய்யப்பட்டது.

- **கைத்தொழில்களின் வருடாந்த அளவீடு**

சுரங்கமறுத்தல் கற்பாறை தோண்டல் உற்பத்திக்கைத்தொழில் மின்சாரம் வாயு நீர்விநியோகம் சம்பந்தமான பொருளாதார முயற்சிகளை உள்ளடக்குகின்றது. 25 அல்லது 25க்கு மேற்பட்ட ஊழியர்கள் கொண்ட நிறுவனங்கள் முற்றாக அளவீட்டுக்கு எடுக்கப்பட்டன. ஏனைய நிறுவனங்கள் மாதிரியாக தெரிவு செய்தலில் உள்ளடக்கப்பட்டன

- **இலங்கை தொழிற்பல அளவீடு**

எமது நாட்டின் தொழிற்பல பண்புகளின் தற்போதைய நிலையை அளவிடுவதற்காக மாதந்தோறும் தொடர்ச்சியாக அளவீடு நடாத்தப்படும். மாதாந்தம் 30 அல்லது 40 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு அளவிடப்படும். காலாண்டு ரீதியாக மேற்படி மதிப்பீடுகள் வெளியிடப்படுகின்றன.

## ❖ குடித்தன வருமான செலவின அளவீடு

குடித்தனங்களின் மக்களியல் பண்புகள் சம்பந்தமான தகவல்களின் பின்னணியில் குடித்தன வருமான செலவினம் சம்பந்தமாக விரிவான தகவல்கள் பெறும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவீட்டில் குடித்தனத்தின் நுகர்வுப்போக்கு போசாக்கு கொள்வனவு சம்பந்தமான தகவல்களும் சேகரிக்கப்படுகின்றது. இது 2018ம் ஆண்டு 4ம் காலாண்டு நிரற்படுத்தப்பட்டு 2019ம் ஆண்டு தரவுகள் மாதாந்தம் சேகரிக்கப்படவுள்ளது.

## ❖ நெற் புள்ளிவிபரம்

நாட்டின் சகல பிரதேசங்களிலும் நீர்ப்பாசன முறைப்படி கணக்கெடுப்பு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகவும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. பண்படுத்தப்பட்டஇ விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட நெற்காணிகளின் விபரம் பெரும்போகம் மற்றும் சிறுபோகம் என்பவற்றிற்கு பெறப்படுகின்றது.

## ❖ மேட்டுநிலப்பயிர்கள் பெரும்போகம் மற்றும் சிறுபோகம்.

பெரும்போகம் சிறுபோகத்திற்கான பருவகால பயிர்களின் செய்கை பண்ணிய நிலப்பரப்பு மற்றும் நிரந்தர ஓரளவு நிரந்தர பயிர்களினது செய்கை பண்ணிய பரப்பு மற்றும் உற்பத்தி சம்பந்தமான விபரங்கள் பெறப்பட்டன.

## ❖ சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும்

பொருள்களினதும் ஏனைய நானாவித பண்டங்களினதும் சில்லறை விலைகள் மாவட்டத்தில் உள்ள நகரத்தில் வாராந்த, மாதாந்த, காலாண்டு அடிப்படையில் சேகரிக்கப்பட்டது. தேசிய கணக்குகள் கணிப்பதற்காக உள்ளூரில் விளைவிக்கப்படும் உற்பத்தியாளர் விலைகள் பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் சேகரிக்கப்பட்டது.

## ❖ கால்நடைப் புள்ளிவிபரங்கள்

கால்நடை புள்ளிவிபரமானது வருடந்தோறும் யூன் 30ம் திகதியை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றது. இத்திரட்டப்பட்ட தகவல்களிலிருந்து ஒரு நாளில் உற்பத்தி

செய்யப்படும் பாலின் அளவு மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை என்பன பெறப்படுகின்றன

- **கொல்களங்களில் கொல்லப்படும் விலங்குகளின் எண்ணிக்கை**
  இத்தரவானது வருடந்தோறும் பிரதேச சபைகளிலிருந்து பெறப்படுகின்றன. அந்தவகையில் கடந்த வருடம் 3008 மாடுகள் கொல்லப்பட்டதென வழங்கப்பட்டது.
- **கட்டிட புள்ளிவிபரம்**
  இத்தரவானது ஒவ்வொரு மாதமும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் எமது திணைக்கள உத்தியோகத்தர்களினால் பிரதேச சபைகளிலிருந்து பெறப்படுகின்றது. இத்தரவினூடாக அனுமதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதல்கள் என்பன பெறப்படுகின்றன.

### 5.1.12 மாவட்ட பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள்

**அலுவலர்களுக்கிடையிலான மனித வளத் திறன் விருத்தி வழிகாட்டல் செயற்பாடுகள்**

மாவட்டச் செயலக பயிற்சி அலகின் ஊடாக பல்வேறு வகையான பயிற்சி வகுப்புக்களை மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக அலுவலர்களின் செயற்றிறன்களை விருத்தி செய்யும் நோக்கில் திட்டமிட்டு வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம்.
அத்துடன் ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலிருந்தும் பெறப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலும் அவ் அலுவலர்களின் கிளைத் தலைவர்களிடமிருந்தும் அலுவலர்களிடமிருந்தும் பெறப்படும் இடைவெளி மதிப்பீட்டின் அடிப்படையிலும் பயிற்சிச் செயலமர்வுகள் திட்டமிடப்பட்டு நடாத்தப்படுகின்றமை எமது வெற்றிகரமான அடைவுகளில் ஒன்றாக உள்ளது.

## 2018ல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பயிற்சி வகுப்புக்கள் வருமாறு

| தொ. இல | பயிற்சி வகைகள் | பயிற்சி எண்ணிக்கை | பங்குபற்றுனர் தொகுதி | பங்குபற்றுனர் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | நிர்வாகம் | 3 | அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது முகாமைத்துவ உதவியாளர், கிராம அலுவலர்கள் | 108 | 52230.00 |
| 2 | நிதி | 5 | அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது முகாமைத்துவ உதவியாளர், | 206 | 189980.00 |
| 3 | மொழி | 2 | அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது முகாமைத்துவ உதவியாளர், கிராம அலுவலர்கள் | 72 | 29638.00 |
| 4 | தகவல் தொழில்நுட்பம் | 5 | அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது முகாமைத்துவ உதவியாளர், கிராம அலுவலர்கள் | 232 | 101862.00 |
| 5 | முகாமைத்துவம் | 6 | அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது முகாமைத்துவ உதவியாளர், கிராம அலுவலர்கள் | 276 | 114138.00 |
| 6 | அறிமுகப் பயிற்சி | 4 | பொது முகாமைத்துவ உதவியாளர், கிராம அலுவலர்கள் | 66 | 336470.00 |
| 7 | e-கிராம அலுவலர் | 1 | கிராம அலுவலர்கள் | 40 | 182290.00 |
| 8 | ஏனையவை | 6 | அனைத்து வகுதியினர் | 354 | 119312.00 |
| **மொத்தம்** | | | | 1354 | 1125920.00 |

### 5.1.13 புலன் விசாரணைப்பிரிவின் செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல்வேறு தரப்பினராலும் முன் வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான ஆரம்ப விசாரணை நடாத்தும் பொருட்டு கிளிநொச்சி மாவட்டசெயலகத்தில் ஐந்துபேர் கொண்ட குழுவாக புலன் விசாரணை பிரிவானது பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2013ம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் பிரதேசசெயலகங்கள் மற்றும் கிராமஅலுவலர் பிரிவுகள், பிரிவுகள் சார்ந்த கிராமங்களில் இருந்து கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் மிகவும் வினைத்திறனுடன் சிறப்பாக செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

மேலும் வழங்கப்படுகின்ற முறைப்பாடுகளை முறைப்படியாகவும் வினைத்திறன் உடையதாகவும் மேற்கொள்வதற்கும் மற்றும் புலன் விசாரணைப் பிரிவு உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்துவதற்கமான செயன் முறைகள் தொடர்பாகவும் உரிய முன் மொழிவுகள் சிபார்சுகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பில் அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபரது பங்களிப்புக்கள் திருப்திகரமானதாக அமைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அலுவலர்கள் மற்றும் அமைப்புக்கள் சார்ந்த ஊழல்கள் மற்றும் பக்கச் சார்பான குற்றச்சாட்டுகள் தொடர்பான ஏழு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவை தொடர்பான அறிக்கைகள் அனுப்பட்டுள்ளது.

- பொது அமைப்புக்கள் தொடர்பாக முறைப்பாடுகள் - 02
- கட்டுமாணங்கள் தொடர்பாக முறைப்பாடு - 01
- அரச அலுவலர்கள் தொடர்பாக முறைப்பாடுகள் - 04

இவற்றை விட நான்கு வகையான பயனாளிகள் தெரிவு தொடர்பான அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டும் அவை தொடர்பான அறிக்கைகள் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- கிணற்றுப் பயனாளிகள் தெரிவு தொடர்பாக
- மலசலகூடப் பயனாளிகள் தெரிவு தொடர்பாக

- வாழ்வாதார பயனாளிகள் தெரிவு தொடர்பாக
- வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவு தொடர்பாக
- உலக உணவுத்திட்ட பயனாளிகள் தெரிவு தொடர்பாக

இவற்றைவிட புலன்விசாரணைப் பிரிவானது தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் முதலிடம் பெறுவதற்கான பங்களிப்பினையும் வழங்கியுள்ளது.

### 5.1.14 உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலகின் செயற்பாடுகள்

மாவட்ட செயலக உற்பத்தித்திறன் மேம்பாட்டு அலகின் கீழ் மாவட்ட செயலகத்தில் உற்பத்தித்திறனை மேற்கொள்வதற்கு எமது அலகு பெரும்பங்காற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எமது மாவட்ட செயலகமானது 2016/2017 ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் முதலாம் இடத்தினை பெற்று சாதனை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

எமது மாவட்டத்தில் உற்பத்தித்திறன் செயற்பாட்டுகளை முன்னெடுப்பதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ள உற்பத்தித்திறன் உத்தியோகத்தர்கள் தமது பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பாடசாலை முன்பள்ளி அரச தனியார் திணைக்களங்களுக்கு சென்று அவர்களை ஊக்குவித்து தேசிய உற்பத்தித்திறன் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

#### உற்பத்தித்திறன் மேம்பாடு தொடர்பான 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை

2018 ஆம் ஆண்டிற்கான உற்பத்தித்திறன் நடைமுறையினை உயர்த்துவதற்காக முற்கூட்டியே மாவட்ட செயலக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் உற்பத்தித்திறன் பற்றிய போதிய அறிவு வழங்கப்பட்டதுடன் பயிற்சி கொடுக்கப்பட்டது.

- மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் 22 தரவட்டக்குழுக்களை உருவாக்கி பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றிற்கு தீர்வு காணப்பட்டது.

- மாவட்ட செயலகத்தில் உள்ள ஒவ்வொரு கிளைகளிற்கும் இடையில் உற்பத்தித்திறன் தொடர்பான போட்டிகள நடாத்தப்பட்டு நினைவுப்பரிசில்களும் உத்தியோகத்தர்களின் திறமை அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.
- அனைத்து வேலைகளும் இலத்திரனியல் செயன்முறை மூலம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை. (E Record, voucher management Rating system inventory management letter management

இவ்வாறாக எமது மாவட்டத்தில் உற்பத்தித்திறன் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வாண்டில் மேலும் தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடரிலும் வெற்றியீட்டுவதற்குரிய செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

### 5.1.15. காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

திணைக்களத்தின் நோக்கு நாட்டின் நிலவளத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதாகும். இந் நோக்கை அடைவதற்கு வேண்டிய பல பணிகளை திணைக்களம் ஏற்றுக்கொள்கின்றது. அவை நாட்டின் நிலவளத்தை மிகச் சிறப்பாக பயன்படுத்துவதற்கு கூட்டாக வழிகாட்டுகின்றது. .

**நிலத்தை வளங்குன்றாத வகையில் பயன்படுத்துவதற்காக கிராம மட்டத்திலான காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்**





**மண் மற்றும் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடமுறைப்படுத்துவதன் மூலம் குறைந்த பாவனையிலுள்ள விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.**





## தெரிவு செய்யப்பட்ட காணிப் பயன்பாட்டுப் பிரச்சனைகள் மற்றும் மாவட்டங்களில் காணிப் பயன்பாட்டில் மாற்றங்கள் பற்றி விஷேட ஆய்வுகளை மேற்கொள்ளல்





## வளங்குன்றாத காணிப் பயன்பாட்டிற்கு பயிற்சிப் பட்டறை கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள், விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் ஆகியவற்றை நடாத்துதல்





2. மாவட்ட மற்றும் பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக் கூட்டம்





## 5.2 சமூகசேவைகள் மற்றும் கலாச்சார முன்னேற்றம்

### 5.2.1. கலாச்சாரப் பிரிவின் செயற்பாடுகள்

**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

1. சர்வமத வழிபாடு - 02.01.2018

2018ஆம் ஆண்டின் ஆரம்பத்தை முன்னிட்டு ஆசிவேண்டி பூஜை வழிபாடுகள் கீழ்குறிப்பிடப்படுகின்ற வணக்கஸ்தலங்களில் நடாத்தப்பட்டது. 113 பேர் வரையில் கலந்துகொண்டனர்.

- கந்தசாமி ஆலயம் - A9 வீதி, கிளிநொச்சி
- புனித அந்தோனியார் தேவாலயம் - 55ஆம் கட்டை,கிளிநொச்சி
- லும்மினி விகாரை - A9 வீதி,கிளிநொச்சி






### 2. மாவட்ட பண்பாட்டு விழா - 20.04.2018

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழா மாவட்டச் செயலக பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. கலைஞர்கள் கௌரவிப்பு, தேசிய கலை இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் கௌரவிப்பு, கலைமன்றங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் பெற்றிபெற்ற மன்றங்கள் கௌரவிப்பு, தேசிய ரீதியில் வெற்றி பெற்றவர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன. 350பேர் வரையிலானோர் கலந்துகொண்டனர்






### 3. மாவட்ட மட்ட கவிதை பாடல் போட்டி – 08.09.2018

மாவட்ட மட்ட கவிதை பாடல் போட்டி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. 30பேர் பங்குபற்றியிருந்தனர்.

### 4. மாவட்ட மட்ட விவாதப் போட்டி – 21.10.2018

மாவட்ட மட்ட விவாதப்போட்டி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. 35பேர் பங்குபற்றியிருந்தனர்.

### 5. ஓவியபபடைப்பு சிறுவர் வேலைத்திட்டம்

சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி சாந்தபுரம் முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலையில் நடாத்தப்பட்டு பங்குபற்றிய அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன 70மாணவர்கள் கலந்து கொண்டனர்

### 6. நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு

கரைச்சி, கண்டாவளை,பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பொது நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.





## 7. கலைஞர் சுவதம் நிகழ்ச்சித்திட்டம்

கலைத்துறைக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கும் முதுபெருங் கலைஞர்களது வீடுகளுக்குச் சென்று அவர்களது சுகதுக்கங்களை விசாரித்து கலந்துரையாடி அவர்களுக்குப் பரிசுப்பொருட்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கொளரவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் இடங்களில் நடைபெற்றது.

- கண்டாவளை - 15 பேர்
- கரைச்சி - 12 பேர்
- பூநகரி - 15 பேர்
- பச்சிலைப்பள்ளி - 20 பேர்

## கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

### 1. மறைக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2018

| தொ.இல | ஆலயம் | தொகை |
|---|---|---|
| 01 | புனித சூசையப்பர் ஆலயம், வட்டக்கச்சி | 10,000.00 |
| 02 | புனித அன்னாள் ஆலயம், வலைப்பாடு | 10,000.00 |
| 03 | புனித அந்தோனியார் ஆலயம், பரந்தன் | 10,000.00 |
| 04 | புனித அந்தோனியார் ஆலயம், பூநகரி | 10,000.00 |





## 2. பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா முன்னாயத்தக்கலந்துரையாடல் - 2018

| தொ.இல | செயலகம் | தொகை |
|---|---|---|
| 01 | மாவட்டச் செயலகம், கிளிநொச்சி | 30,000.00 |
| 02 | பிரதேச செயலகம், பூநகரி | 30,000.00 |

## 3. மறைப்பாடசாலை நூலகங்களுக்கான புத்தகங்கள் கொள்வனவு

| தொ.இல | ஆலயம் | தொகை |
|---|---|---|
| 01 | புனித திரேசாள் ஆலயம், கிளிநொச்சி | 20,000.00 |
| 02 | புனித மரியாள் ஆலயம், பூநகரி | 20,000.00 |

## 4. ஆயர் இல்லம் ஊடாக வழங்கப்படும் கொடுப்பனவுகள்

| தொ. இல | ஆலயம் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | மறைப்பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை (பெண்கள்) | 275 | 729,600.00 |
| 02 | மறைப்பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை (ஆண்கள்;) | 14 | |
| 03 | அருட் தந்தையர், அருட்சகோதரிகளுக்கான சீருடை | 12 | |
| | மொத்தம் | 301 | 729,600.00 |

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

1. **ஆலய புனரமைப்பு வேலைத்திட்டங்கள் - 2018**




**இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின்அறிவுறுத்தலுக்கமைய ஆலயங்களில் அறநெறிப்பாடசாலைகளில் நடைபெறும் வேலைத்திட்டங்கள்**

1. **சமய விழாக்கள் குரு பூசை தினங்கள்**




2. **அறநெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு**




## 3. பண்ணிசை யோகாசன வகுப்புக்கள்

நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் அறநெறி மாணவர்களுக்கு பண்ணிசை, யோகாசன வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆறுமாத கால பயிற்சி நெறி முடிந்தவுடன் சான்றிதழ் வழங்கப்படும். இதில் சுமார் 2000 மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைகின்றனர்.





## 4. அறநெறிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அறநெறிக்கல்வி கொடி வாரம்

அறநெறிக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அலுவலகங்கள் பாடசாலைகள் அறநெறிப்பாடசாலைகள். திணைக்களங்கள் யாவற்றிலும் அறநெறிக்கல்வி விழிப்புணர்வு நடைபெற்றது.






## 5. தேசிய ஆக்கத்திறன் போட்டி

அறநெறி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் பொருட்டு அவர்களுக்கு பேச்சு கதாப்பிரசாங்கம் எழுத்தாற்றல் சித்திரம் நடனம் நாடகம் பண்ணிசை வில்லுப்பாட்டு போன்ற போட்டிகள் பிரதேச மட்டம் மாவட்ட மட்டம்தேசியமட்டம் ரீதியாக நடைபெற்று எமது மாவட்ட இந்து சிறார்கள் தேசிய

மட்டத்தில் விருது பெற்றார்கள். இவர்களுக்குரிய பாராட்டு நிகழ்வுகள் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் சிறப்பாக நடைபெற்றது.

### 6. மனப்பாங்கு பரீட்சைகள்

அறநெறி மாணவர்களின் மனப்பாங்கை வெளிக்கொணரும் பொருட்டு அனைத்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் மனப்பாங்குப் பரீட்சை நடைபெற்றது





## வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகள்

| இல | விபரம் | இடம் | காலம் | நிதி ஒதுக்கீடு | பய னாளி கள |
|---|---|---|---|---|---|
| 01 | தைப்பொங்கல் விழா | புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், கண்டாவளை | 15.01.2018 | திணைக்கள செயற்றிட்டம் | 150 |
| 02 | பாரம்பரியபொருட்கள், கைவினைப்பொருட்கள் கண்காட்சி | மாவட்டச் செயலக பயிற்சி நிலையம் | 19.04.2018 | 150,000.00 | 200 |
| 03 | மாவட்டப் பண்பாட்டு விழா | மாவட்டச் செயலக பயிற்சி நிலையம் | 20.04.2018 | 200,000.00 | 400 |
| 04 | ஆடிப்பிறப்பு விழா | மாவட்டச் செயலகம் | 17.07.2018 | 20,000.00 | 200 |















## 1. கலை ஆக்கத்திறன் போட்டிகள்

| இல | போட்டி விபரம் | கலை மன்றங்கள் விண்ணப்பம் | அரச ஊழியர்கள் விண்ணப்பம் | பங்கு கொண்டோர் எண்ணிக்கை | | மாவட்டம் கலை மன்றம | மாகாணம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | பாடலாக்கம் | 12 | 11 | 06 | 08 | - | - | 2ம் இடம் |
| 02 | கவிதை | 14 | 16 | 10 | 07 | - | - | 3ம் இடம் |
| 03 | சிறுகதை | 12 | 10 | 08 | 04 | - | - | - |
| 04 | ஓவியம் | 18 | 05 | 11 | 01 | - | - | - |
| 05 | தனிநடிப்பு | 06 | 01 | 06 | 01 | - | 2ம் | 1ம் |
| 06 | நாடகம் | | | - | - | - | 3ம் | - |
| 07 | தனி நடனம் | 11 | - | 11 | - | 1ம், 2ம், 3ம் | - | - |
| 08 | குழு நடனம் | 04 | - | 02 | - | 1ம், 2ம் | 1ம் | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 09 | வில்லிசை | 03 | - | 01 | - | 1ம், 2ம் | - | - |
| 10 | நாட்டிய நாடகம் | 02 | - | - | - | - | - | - |
| 11 | நாடகவாக்கம் | 06 | - | 02 | - | - | - | - |
| 12 | புகைப்படம் | 02 | - | - | - | - | 2ம் | - |

### 2. மாவட்டப் பண்பாட்டு விழா - வழங்கப்பட்ட விருதுகள

| இல | விருதின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கலைக்கிளி விருது | 04 |
| 02 | இளங்கலைஞர் விருது | 04 |

### 3. மாவட்டப் பண்பாட்டு விழா - சான்றிதழ் வழங்கப்பட்டோர் விபரம்

| இல | விருதின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தேசியமட்ட விருது பெற்றோர் | 33 |
| 02 | நற்சான்றிதழ் வழங்கப்பட்டோர் | 04 |
| 03 | கலை ஆக்கத்திறன் போட்டிகள் | 24 |

### 5.2.2 முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி பிரிவின் செயற்பாடுகள்.

முன்பிள்ளை பருவம் என்பது கர்ப்பத்தில் உருவாகும் குழந்தையின் காலப் பகுதியில் இருந்து 5 வயதுவரையான காலப் பகுதியாகும். முன்பிள்ளை பருவ அபிவிருத்தி என்பது சிறுவர்களின் பௌதீகத் தன்மை, மனவெழுச்சி தன்மை, சமூக விருத்தி, மற்றும் அறிவு வளர்ச்சி என்பவற்றில் ஒன்றுகுவிந்த ஒரு முழுமையான அணுகுமுறையை வலியுறுத்துவதாகும். இதன் நோக்கம் சிறுவர்களை உடல், உள விருத்தி மற்றும் தெளிவான மனநிலையுடனும் நல்ல பழக்கவழக்கத்துடனும் பாடசாலை செல்வதற்கான சுபாவநிலைக்கு அவர்களை தயார்படுத்தல் ஆகும்.

| இல | அமைச்சு/திணைக் களம் | நிகழ்ச்சித்திட்டம் | கிடைத்த ஒதுக்கீடு | செலவு | மீதி ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| 01 | சிறுவர் செயலகம் | கர்ப்பிணித்தாய்மார்களுக் கான போசனை | 33500000.00 | 39558000.00 | |
| 02 | சிறுவர் பெண்கள் அமைச்சு | சிறுவர் அபிவிருத்தி கமிட்டி கூட்டம் | 7000.00 | 7000.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | சிறுவர் செயலகம் | முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு – மாவட்டசெயலகம் | 57200.00 | 57200.00 | |
| 04 | சிறுவர் செயலகம் | முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் | 5400.00 | 4030.00 | 1370.00 |
| 05 | சிறுவர் செயலகம் | ஒட்டிசம் - ஆசிரியர் நிகழ்வு | 30000.00 | 29936.00 | 64.00 |
| 06 | சிறுவர் செயலகம் | முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு- பிரதேச செயலகம் | 178000.00 | 178000.00 | 00 |
| 07 | சிறுவர் செயலகம் | முன்பள்ளி சிறுவர் போசாக்கு | 8376760.00 | 8171690.00 | 197570.00 |
| 08 | சிறுவர் செயலகம் | பெண்கள் மற்றும் சிறுவர் அமைச்சு முன்னேற்ற கூட்டம் | 57350.00 | 54850.00 | 2500.00 |
| 09 | சிறுவர் செயலகம் | ஒட்டிசம் - ஆசிரியர் நிகழ்வு | 90000.00 | 90000.00 | 00 |

### 5.2.3 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை செயற்பாடுகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது சிறுவர் தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச கொள்கைக்கு இணங்க சிறுவரின் உயரிய நலனைப் பேணுவதற்காக செயற்பட்டு வருகின்றது .மேலும் இடர்நிலையிலுள்ள குடும்பங்களை இனங்காணுதல் அக்குடும்பங்களுக்கு தேவையான சேவைகளை வழங்குதல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. எமது மாவட்டத்தில் உள்ள பிள்ளைகளின் பாதுகாப்பு சம்மந்தமாக தாய் தந்தை மற்றும் பாதுகாவலர்களுக்கு கூடிய பொறுப்பினை வழங்கி இப் பொறுப்பினை சமுகம் உணரும் வரைக்கும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையானது துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ள சிறுவர்களை பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்பளிக்கும் விடயங்களில் ஈடுபடுகின்ற நிறுவனமாக செயற்படுகின்றது.

துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ள பிள்ளைகள் சம்பந்தமாக பணியாற்றும் போது பொலிஸ் நிலையங்கள் நன்னடத்தை திணைக்களம் மற்றும் நீதிமன்றம் போன்றவை பெரும் பங்களிப்பை வழங்குகிறது அத்துடன் சிறுவர் தொடர்பான புதிய சட்டங்களை உருவாக்குதல் மற்றும் மாற்றியமைக்கப்பட வேண்டிய செயற்திட்டங்களையும் அரசுக்கு பரிந்துரை செய்கின்றது.

தற்போதைய சூழ்நிலைகளில் மாணவர் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் போதைப்பொருள் பாவனை தொடர்பான பிரச்சினைகளை கையாளுதல் பாடசாலை இடைவிலகல் மற்றும் பிறழ்வு நடத்தை உள்ள மாணவர்களின் பிரச்சினைகளை தீர்த்தல் போன்ற செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

### 5.2.4 உளவளத்துணை செயற்பாட்டு அறிக்கை

சமூக வலுவூட்டல் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் தேசிய உளவளத்துணை நிலையத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உளவளத்துணை நிலையங்களால் மேற்கொள்ளப்பட்ட 2018 ம் ஆண்டுக்கான உளவளத்துணை செயற்பாடுகள்.

| உளவளத்துணை நிலையங்கள் | உளவளத்துணை | | விழிப்புணர்வு நிகழ்வு | | பயிற்சிப்பட்டறை | |
|---|---|---|---|---|---|---|
| | துணை நாடிகள் எண். | அமர்வுகளின் எண். | நிகழ்வு எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | நிகழ்வு எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
| மாவட்ட உளவளத்துணை நிலையம் | 87 | 334 | 26 | 1864 | 04 | 182 |
| கரைச்சி உளவளத்துணை நிலையம் | 52 | 221 | 14 | 567 | 01 | 56 |
| பச்சிலைப்பள்ளி உளவளத்துணை நிலையம் | 41 | 154 | 13 | 418 | - | - |
| **மொத்தம்** | **180** | **731** | **58** | **2849** | **05** | **238** |

பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. இவ் விழிப்புணர்வு நிகழ்வுகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டது.

- கற்றல் திறன்களை மேம்படுத்தல்
- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும் மற்றும் அதனை தடுத்தலும்
- பெற்றோரியம்

இதனைப்போலவே கிராம மட்டத்திலும் உளசமூக பிரச்சினைகளை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன

- உளசமூகப்பிரச்சினைகளும் அதனை தடுத்தலும்
- பிள்ளை வளர்ப்பு முறைகளில் உளசமூக நோக்கு
- மதுபோதை துஷ்பிரயோகத்தை தடுத்தல்
- பெற்றோரியம் தொடர்பான திறன்களும் வீட்டு வன்முறைகளும்
- மகிழ்ச்சியான குடும்பத்தை அமைத்தல்
- ஆராக்கியமான முதுமை

இதேபோல உளவளத்துணை சார்ந்த பல்வேறு பயிற்சிப்பட்டறைகளும் நிகழ்த்தப்பட்டன இவை அரச பணியாளர்கள், கிராம மட்ட நிறுவனங்கள், போன்றவர்களை மையப்படுத்தி நிகழ்த்தப்பட்டது. அப்பயிற்சிப்பட்டறைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக சிறுவர் பிரச்சினைகளுக்கான தலையீட்டு முறைகள்

- ஆளிடைத் தொடர்பாடல்
- முதியோர் உளநலத்தை விளங்கிக்கொள்ளல்
- பணியநெருக்கீடும் நெருக்கீட்டு முகாமைத்துவமும்
- பால்நிலை வன்முறை

### 5.2.5 மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயற்பாடு

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் நோக்கமானது பெண்களினதும் சிறுவர்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் கண்ணியமான தேசத்தை உருவாக்குதல் ஆகும். இந்த வகையில் கிராமங்கள் தோறும் மகளிர் விவகாரக் குழுக்களை அமைத்து அவற்றினூடாக பெண்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் சுயதொழிலினை விருத்தி செய்தல் தலைமைத்துவத்தினை வளர்த்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது. மேலும்

பெண்களுக்கெதிரான வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாத்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களை செய்து வருகின்றது

### 5.2.6 நன்னடத்தைசிறுவர் பராமரிப்புசேவைகள் திணைக்களத்தின்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் இத்திணைக்களம் சேவையாற்றிவருகின்றது.அத்துடன் பிரதேசசெயலகங்கள் தோறும் சிறுவர் உரிமைமேம்பாட்டு உத்தியோகத்தர்களை நியமித்து. சிறுவர்களின் பாதுகாப்பு பங்களிப்பு தொடர்பாக சேவையாற்றிவருகின்றது. மேலும் சிறுவர் உரிமைகள் தொடர்பாக பிள்ளைகள் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டுவருவதுடன் அபிவிருத்தி தொடர்பாக பல நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொண்டுவருகின்றது.

- மாதிரிக்கிராம நிகழ்ச்சித்திட்டம்
- சுவர் ஓவியம்
- சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டம்
- சிறுவர் கழக தொண்டர்களுக்கான நிகழ்வு
- பிரதேசசிறுவர் அபிவிருத்திக்குழு கலந்துரையாடல்
- விழிப்புணர்வு நிகழ்வு
- கல்வி உதவி
- முதலுதவி முறையியல
- உலக சிறுவர் தினம்
- இரட்டைக்குழந்தைகளுக்கான உதவி
- மருத்துவ உதவி
- அவசர உதவி
- கபகரு டெகுறு கல்வி உதவி
- சமூக பராமரிப்பு திட்டம்
- தேசிய சிறுவர் சபை நிகழ்ச்சித்திட்டம்
- மாதாந்த முன்னேற்ற கலந்துரையாடல்

### 5.2.7 சமூக சேவைகள் பிரிவின் செயற்பாடுகள்

1. **அங்கவீனர்களுக்கான 3000 ரூபா கொடுப்பனவு**

மாற்று வலுவுடையோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 3000 ரூபா கொடுப்பனவு வழங்கபடுகின்றது.

| இல | பிரதேச செயலகம் | 3000 ரூபா கொடுப்பனவு பெற்றுக் கொள்வோர் | 3000 ரூபா கொடுப்பனவு பெற தகுதியானோர் |
|---|---|---|---|
| 01 | கரைச்சி | 122 | 799 |
| 02 | கண்டாவளை | 123 | 370 |
| 03 | பூநகரி | 131 | 341 |
| 04 | பச்சிலைப்பள்ளி | 121 | 120 |
| மொத்தம் | | 497 | 1630 |

2. 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு 2000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இக் கொடுப்பனவில் 100 ரூபா கழிக்கப்பட்ட முதியோர் நலன்புரிக்கு வழங்கப்படுகிறது.

| இல | பிரதேச செயலகம் | 2000 ரூபா கொடுப்பனவு பெற்றுக் கொள்வோர் | 2000 ரூபா கொடுப்பனவு பெற தகுதியானோர் |
|---|---|---|---|
| 01 | கரைச்சி | 2,103 | 150 |
| 02 | கண்டாவளை | 730 | 101 |
| 03 | பூநகரி | 608 | 120 |
| 04 | பச்சிலைப்பள்ளி | 367 | 20 |
| | | | |
| மொத்தம் | | **3808** | **391** |

3. மாற்று வலுவுடையோரை ஊக்குவிப்பதற்காக சமூக சேவை திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்

| இல | திணைக்களம் | நிகழ்ச்சித் திட்டம் | கிடைத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 01 | சமூக சேவைகள் திணைக்களம் | அங்கவீனமுற்ற நபர்களுக்கான தடகள விளையாட்டுப் போட்டி | 205,000 |
| 02 | சமூக சேவைகள் திணைக்களம் | CBR ஒதுக்கீடு | 237,000 |
| 03 | சமூக சேவைகள் திணைக்களம் | சுய உதவி அமைப்புக்களுக்கிடையே | 20,000 |

| | | | |
|---|---|---|---|
| | | போட்டி நடாத்துதல் | |
| 04 | சமூக சேவைகள் திணைக்களம் | சித்று கலாச்சார நிகழ்வு | 192,000 |
| 05 | சமூக சேவைகள் திணைக்களம் | போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 100,000 |

### 5.2.8 மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் செயற்பாடுகள்

மாவட்டச் செயலாளரின் தலைமையில் ஜனாதிபதி உடல் ஆரோக்கிய வார நிகழ்ச்சித் திட்டத்தில் உடல் நல மேம்பாட்டுச் செயற்பாடுகள் அலுவலர்களுக்கு மேற்கொள்ளப்பட்டதுடன். முன்பள்ளி மாணவர்கள் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களும் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

கிறீடா சக்தி நிகழ்ச்சித் திட்டத்தில் 13 விளையாட்டுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிற்கான வீர வீராங்கனைகளும் பயிற்றுனர்களும் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது. வீரர்களுக்கான திறமைகாண் நிகழ்வு நடாத்தப்பட்டது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத்திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இணைந்து வீர வீராங்கனைகள் தெரிவுகள் நடைபெற்றன.

கீழ்வரும் விளையாட்டுக்களுக்கான பயிற்சி முகாம்கள் நடாத்தப்பட்டன.

- தடகளப் பயிற்சி முகாம்
- வலைப்பந்தாட் பயிற்சி முகாம்.
- கூடைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்.
- துடுப்பாட்டப் பயிற்சி முகாம்.
- உதைப்பந்தாட்டப் பயிற்சி முகாம்.
- யூடோ பயிற்சி முகாம்.
- தைவுண்டோ பயிற்சி முகாம்

பிரதேச மட்டம் மாவட்ட மட்டப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அத்துடன் மாகாண மட்டத்தில் மென்பந்து துடுப்பாட்டம் தைவுண்டோ ஊர்சுற்றி ஓட்டம்கரப்பந்தாட்டம் உதைபந்தாட்டம் ஆண்கள் இறுதிப்போட்டி ஆகிய போட்டிகளும் எமது மாவட்டத்தில் நடைபெற்றன. மாகாண சபை உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியின் மூலம் விளையாட்டுக்கழகங்களிற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் மாவட்ட

பிரதேச விளையாட்டுப் பிரிவுகளிற்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**மாகாணமட்டப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டம் பெற்றுக்கொண்ட பதக்கங்களின் விபரம்**

| இல | போட்டி | ஆண், பெண் | பதக்கம் |
|---|---|---|---|
| 01 | தடகளம் | பெண் | தங்கம் |
| 02 | எல்லே | ஆண் | வெள்ளி |
| 03 | எல்லே | பெண் | வெள்ளி |
| 04 | தைவுண்டோ | ஆண் | வெண்கலம் |
| 05 | கராத்தே | பெண் | வெள்ளி |
| 06 | கடற்கரை கரப்பந்து | பெண் | வெள்ளி |
| 07 | யூடோ | பெண் | தங்கம் |
| 08 | யூடோ | ஆண் | வெண்கலம் |
| 09 | துடுப்பாட்டம் | ஆண் | தங்கம் |
| 10 | துடுப்பாட்டம் | பெண் | வெள்ளி |
| 11 | சதுரங்கம் | பெண் | வெள்ளி |
| 12 | சதுரங்கம் | பெண் | வெள்ளி |
| 13 | கரப்பந்து | பெண் | வெள்ளி |
| 14 | கரப்பந்து | ஆண் | வெள்ளி |
| 15 | கடற்கரை கபடி | பெண் | தங்கம் |
| 16 | உதைபந்தாட்டம் | பெண் | தங்கம் |
| 17 | மேசைப் பந்தாட்டம் | பெண் | வெள்ளி |
| 18 | கயிறிழுத்தல் | பெண் | வெள்ளி |
| 19 | கபடி | பெண் | வெள்ளி |

தேசியமட்டப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ம் பெற்றுக்கொண்ட பதக்கங்களின் விபரம்.

- தைவுண்டோ பெண் தங்கம் செல்வி. இ. தமிழ்மகள்
- குத்துச்சண்டை ஆண் வெள்ளி செல்வன். ந. நிக்கிலஸ்
- யூடோ பெண் வெண்கலம் செல்வி. ச. துர்க்கா

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து அரச திணைக்களங்களை ஒன்றிணைத்து அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டன.

## 5.3 அபிவிருத்தி செயற்பாடுகள்

### 5.3.1 மாவட்ட திட்டமிடல் செயலகம்.

- மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.
- சிறுகுளங்கள் அபிவிருத்தி
- வாழ்வாதாரம்
- கூட்டுறவின் அரவணைப்பு கடன் திட்டம்
- உற்பத்தி கூட்டுறவு கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டம்
- . நீர்வழங்கல்
- சுகாதார வசதிகளை ஏற்படுத்தல் வேலைத்திட்டம்
- மின்சாரம்

**சனாதிபதி செயலகத்தின் வேலைத்திட்டம்**

- கிராமசக்தி
- தேசிய போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்
- சிறுநீரக நோய்த்தடுப்பு வேலைத்திட்டம்

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு**

- கம்பரெலிய
- பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட வேலைத்திட்டம்
- உலக உணவு வேலைத்திட்டம்
- தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சு
- தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்தற்குமான அலுவலகம்
- தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சு
- இளைஞர் அலுவல்கள் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு
- மீன்பிடி அமைச்சு

**சிறுகுளங்கள் புனரமைத்தல் வேலைத்திட்டம்**

கிளிநொச்சி மாவட்டத்தில் 2018 ஆம் வருடத்தில் சிறுகுளங்கள் புனரமைத்தலுக்காக ரூபா 8.5 மில்லியன் மீள் குடியேற்ற அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிதி மூலம் இவ்வருடம் நான்கு சிறுகுளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.இவற்றின் மூலம் 400 ற்கு

மேற்பட்ட விவசாய குடும்பங்கள் பயன்பெற உள்ளதுடன் கால்நடைகளின் நீர்த் தேவையினை பூர்த்தி செய்வதற்குஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதன் விபரம் கீழ்வருமாறு

| இல | பிரதேசசெயலர் பிரிவு | குளங்களின் விபரம் | மொத்தத்தொகை |
|---|---|---|---|
| 01 | கரைச்சி | சூரியமோட்டைக்குளம் | 1,900,343.00 |
| | | கல்வெட்டிக்குளம் | 1,008,847.00 |
| 02 | கண்டாவளை | ஆறுமுகத்தான்குளம் | 2,075,208.31 |
| | | ஆலக்காட்டுக்குளம் | 2,131,449.33 |
| மொத்தம் | | | 7,115,897.64 |





## வாழ்வாதார உதவித்திட்டங்கள்

கடந்த மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்குகிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பலதரப்பாலும் பல்வேறுவகையான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இவை முறைப்படுத்தப்பட்ட நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வாழ்வாதாரமாக இல்லாதிருந்ததோடு அவசர கால நிலமையை அடியொற்றியதாகவே காணப்பட்டன. இதனால் யுத்தத்தால் தமது பொருளாதாரத்தின் அடிப்படைக் கட்டுமானங்களையே இழந்தமக்களின் பொருளாதாரத்தை வலுவூட்டி உறுதிப்படுத்த முடியாது போனது.

இந்நிலையில், பயனாளிகளுக்கு வழங்கப்படும் வாழ்வாதாரஉதவிகள் பெறுமதியானதாகவும் பொருளாதார மேம்பாட்டிற்கு வலுச்சேர்ப்பனவாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 2016ம் ஆண்டிலிருந்து அரசாங்கத்தால் அமைச்சுக்களின் ஊடாக வாழ்வாதார வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 2018ம் ஆண்டு வாழ்வாதாரச் செயற்பாடுகளுக்கு இந்த அமைச்சினால் மொத்தமாக 46 மில்லியன் ரூபாய் நிதிவழங்கல் மேற்கொள்ளப்பட்டு 460 பயனாளிகளுக்கு வாழ்வாதார தொழில் முயற்சிகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டன.

புனர்வாழ்வளிப்பு, மிள்குடியேற்றம் வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் நடை முறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார உதவிவேலைத்திட்டம் இவ்வமைச்சின் நிதிப்பங்களிப்பில் இவ்வாண்டு 3 வகைப்பட்ட வாழ்வாதார செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

- பொதுவானவாழ்வாதாரம்
- யுத்தத்தால் அங்கவீனரான மற்றும் யுத்தம் காரணமாக கணவனை இழந்த பெண்களுக்கான வாழ்வாதாரம்.
- புனர்வாழ்வளிக்கப்பட்ட முந்நாள் போராளிகளுக்கான வாழ்வாதாரம்

இத்திட்டத்தின்கீழ் பயனாளி ஒருவருக்கு அதிபட்ச வாழ்வாதார உதவியாக 100,000.00 ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங்குவதற்கு 150 பயனாளிகளுக்கு மேற்படி அமைச்சின் வாழ்வாதாரத்திற்கு பதினைந்து (15)மில்லியன் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## அ) பயனாளிகளின் வகைப்பாடு (Criteria of Beneficiaries)

| இல | பிரதேசசெயலாளர் பிரிவு | பயனாளிகளின் வகைப்பாடு | | | | | | மொத்த குடும்பம |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாற்றுத் திறனாளிகள் | காணாமல் ஆக்கப்பட்ட குடும்பம் | யுத்தத்தில் கொல்லப்பட்ட அங்கத்தவர்குடும்பம் | முந் னாள் போராளி | நாடுதிரும்பியோர் | வறுமை | |
| 1 | கரைச்சி | 11 | 9 | 2 | 22 | 1 | 30 | 75 |
| 2 | கண்டாவளை | 17 | 4 | 0 | 16 | 0 | 8 | 45 |
| 3 | பூநகரி | 20 | 0 | 0 | 0 | 0 | 0 | 20 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 5 | 0 | 0 | 5 | 0 | 0 | 10 |
| மொத்தம் | | 53 | 13 | 2 | 43 | 1 | 38 | 150 |

## ஆ) நிதிஒதுக்கீடும் பயனாளிகளின் எண்ணிக்கையும (Allocation & No. of Beneficiaries)

| இல.. | பி. செ. பிரிவு | மொத்தபயனாளிகள் | மொத்தஒதுக்கீடு) | வாழ்வாதாரத் துறைகள | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | விவசாய | கால்நடை | | | சுய தொ | சிறு | குடி சைக் | மீன் | ஏனைய வை |
| | | | | | ஆடு | மாடு | கோழி | | | | | |
| 1 | கரைச்சி | 75 | 7.5 | 16 | 0 | 0 | 43 | 16 | 0 | 0 | 0 | 0 |
| 2 | கண்டாவளை | 45 | 4.5 | 12 | 9 | 1 | 10 | 13 | 0 | 0 | 0 | 0 |
| 3 | பூநகரி | 20 | 2 | 9 | 1 | 1 | 4 | 2 | 0 | 0 | 3 | 0 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 10 | 1 | 3 | 1 | 0 | 3 | 3 | 0 | 0 | 0 | 0 |
| மொத்தம் | | 150 | 15 | 40 | 11 | 2 | 60 | 34 | 0 | 0 | 3 | 0 |

## வாழ்வாதார உதவிவழங்கல் நடவடிக்கையின்பொது





## யுத்தத்தால் அங்கவீனரானமற்றும் யுத்தம் காரணமாக கணவனை இழந்த பெண்களுக்கான வாழ்வாதாரம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கென விசேடமாக நடைமுறைப்படுத்தப்பட்ட இததிட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு அதிபட்ச வாழ்வாதார உதவியாக 100000 ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங்குவதற்காக 260 பயனாளிகளுக்கென அமைச்சினால் இருபத்தாறு (26)மில்லியன ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

### அ) பயனாளிகளின் வகைப்பாடு (Criteria of Beneficiaries)

| இல.. | பி. செ. பிரிவு | பயனாளிகளின் வகைப்பாடு | | | மொத்தகுடும்பம |
|---|---|---|---|---|---|
| | | மாற்றுத்திறனாளிபெண் தலைமைத்தவம் | மாற்றுத்திறனாளிபெண் | யுத்த விதவை | |
| 1 | கரைச்சி | 6 | 0 | 94 | 100 |
| 2 | கண்டாவளை | 12 | 0 | 62 | 74 |
| 3 | பூநகரி | 2 | 4 | 50 | 56 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 21 | 0 | 9 | 30 |
| மொத்தம் | | 41 | 4 | 215 | 260 |

### ஆ) நிதிஒதுக்கீடும் பயனாளிகளின் எண்ணிக்கையும(Allocation & No. of Beneficiaries)

| இல.. | பி. செ. பிரிவு | மொத்த பயனாளிகள் | பிரதேச செயலகங்களுக்கான மொத்த ஒதுக்கீடு (ரூபாய்) | வாழ்வாதாரத் துறைகள | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | விவ சாயம் | கால்நடை | | | சுய தொ | சிறு தொ | குடி சைக் கைத் |
| | | | | | ஆடு | மாடு | கோழி | | | |
| 1 | கரைச்சி | 100 | 10 | 13 | 0 | 1 | 63 | 23 | 0 | 0 |
| 2 | கண்டாவளை | 74 | 7.4 | 12 | 15 | 3 | 25 | 17 | 0 | 2 |
| 3 | பூநகரி | 56 | 5.6 | 14 | 1 | 6 | 17 | 11 | 0 | 7 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 30 | 3 | 7 | 6 | 3 | 9 | 4 | 1 | 0 |
| மொத்தம் | | 260 | 26 | 46 | 22 | 13 | 114 | 55 | 1 | 9 |

## ஈ) வாழ்வாதார உதவிவழங்கல் நடவடிக்கையின் போது






## புனர்வாழ்வளிக்கப்பட்டமுன்னாள் போராளிகளுக்கான வாழ்வாதாரம்

புனர் வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்காக நிறுவனத்துடன் இணைந்து அமைச்சினால் விசேடமாக நடை முறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ் பயனாளிஒருவருக்குஅதிபட்சவாழ்வாதாரஉதவியாக 100000 ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங்குவதற்காக 50 பயனாளிகளுக்குமாக ஐந்து (5)மில்லியன் ரூபாய்145-01-02-05-2202-0-11 இலக்க தலைப்பிற்கூடாக ஒதுக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

### அ) நிதிஒதுக்கீடும் பயனாளிகளின் எண்ணிக்கையும்

| இல. | பி. செ. பிரிவு | மொத்தபயனாளிகள் | மொத்தஒதுக்கீடு | வாழ்வாதாரத் துறைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | விவசாயம் | கால்நடை | | | சுயதொழில் | சிறுதொழில் | குடிசைக்கைத் தொழில் | மீன்பிடி |
| | | | | | ஆடு | மாடு | கோழி | | | | |
| 1 | கரைச்சி | 27 | 2.7 | 2 | 5 | 1 | 12 | 4 | 3 | - | 0 |
| 2 | கண்டாவளை | 15 | 1.5 | 6 | 2 | 1 | 4 | 1 | 1 | - | 0 |
| 3 | பூநகரி | 4 | 0.4 | 2 | - | - | - | - | - | - | 3 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 4 | 0.4 | 2 | - | - | 1 | 1 | - | - | 0 |
| **மொத்தம்** | | **50** | **5** | **12** | **7** | **2** | **17** | **6** | **4** | - | **2** |

## இ) வாழ்வாதாரஉதவிவழங்கல் நடவடிக்கை





## மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்புவடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.

### கூட்டுறவின் அரவணைப்பு கடன் திட்டம்

இத் திட்டத்தின் கீழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிராமிய வங்கிகளின் சமாசம் ஆகியவற்றுக்கான சுழற்சி முறைக் கடன் வழங்கலுக்கான மானியமாக முதற்கட்டமாக ரூபா .32 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டது. இந் நிதியானது ரூ.20000 படி 1600 களுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் கடனாக வழங்குவதற்காக சங்கங்களிற்கு மானியமாக விடுவிக்கப்பட்டது. விபரத் தொகுப்பு வருமாறு

| இல | சங்கத்தின் பெயர் | மானியம் | பயனாளிஎண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.ச | 4.0 | 200 |
| 2 | கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச | 3.0 | 150 |
| 3 | கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச | 3.5 | 175 |
| 4 | பூநகரி ப.நோ.கூ.ச | 3.25 | 163 |
| 5 | ஜெயபுரம் ப.நோ.கூ.ச | 3.25 | 162 |
| 6 | அக்கராயன் ப.நோ.கூ.ச | 3.0 | 150 |
| 7 | கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.ச | 3.0 | 150 |
| 8 | கிளிநொச்சி மாவட்ட கூ.ச.சமாசம்; | 8.0 | 400 |
| 9 | பூநகரி பனை தென்னை வள அ.ச | 0.5 | 25 |
| 10 | கிளி முல்லை கிராமிய வங்கி | 0.5 | 25 |
| மொத்தம் | | 32 | 1600 |

மேலும் இச் சுழற்சி முறைக் கடன் வழங்கலுக்காக 2ம் கட்டமாக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந் நிதியானது கீழ்க் குறிப்பிடப்படும் சங்கங்களுக்கு விடுவிப்பதற்கு தயார் நிலையிலுள்ளபோதும் கட்டுநிதி விடுவிக்கப்படாமையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாத நிலையிலுள்ளன. விபரம் வருமாறு

| தொ.இல | சங்கத்தின் பெயர் | மானியம் | வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம் | 4.0 | 200 |
| 2 | கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம் | 4.0 | 200 |
| 3 | கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம் | 4.0 | 200 |
| 4 | பூநகரி ப.நோ.கூ.சங்கம் | 4.0 | 200 |
| 5 | ஜெயபுரம் ப.நோ.கூ.ச | 4.0 | 200 |
| 6 | அக்கராயன் ப.நோ.கூ.ச | 4.0 | 200 |
| 7 | கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் | 4.0 | 200 |
| 8 | கிள மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் | 20.0 | 1000 |
| 9 | கிளி முல்லை கிராமிய வங்கி | 1.0 | 50 |
| 10 | பளை பனை தென்னை வள அபிவிருத்தி சங்கம் | 0.5 | 25 |
| 11 | பூநகரி கடற்றொழிலாளர் கூ.சங்கம் | 0.5 | 25 |
| **மொத்தம்** | | **50.00** | **2500** |

## உற்பத்தி கூட்டுறவுகருத்திட்டநிகழ்ச்சித்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்தி கூட்டுறவு கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018 ம் ஆண்டில் மீள் குடியேற்றம் புனர் வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் 12 கருத்திட்டங்களுக்கு ரூபா 97.905மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டமானது கூட்டுறவு அபிவிருத்தி

திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சில சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு கட்டிட புனரமைப்பு இயந்திரங்களை கொள்வனவு செய்து வழங்குதல் ஆகிய விடயங்களின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி கண்டாவளை பூநகரி பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்டது.

**உற்பத்தி கூட்டுறவு கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் மேற் கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம்.**

| தொ .இல | பிரதேசசெயலாளர் பிரிவு | கருத்திட்டம் | ஒதுக்கப்பட்டமொத்தநிதி (ரூபா,மில்லியன் |
|---|---|---|---|
| 1 | கரைச்சி | கரைச்சிதெற்குப.நோ.கூ சங்கம் - சேதனப்பசளைஉற்பத்தி | 12.950 |
| 2 | | திருவையாறுபடித்தவாலிபர் விவசாயஉற்பத்திநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம் (வ-து) –அப்பளஉற்பத்தி | 12.440 |
| 3 | | திருவையாறுபடித்தவாலிபர் விவசாயஉற்பத்திநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம் (வ-து) –அரிசிமாஉற்பத்திமற்றும் பொதியிடல் | 2.680 |
| 4 | | திருவையாறுபடித்தவாலிபர் விவசாயஉற்பத்திநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம் (வ-து) –யூஸ் மற்றும் ஜhம் உற்பத்தி | 12.000 |
| 5 | | அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் -வெதுப்பகம் | 9.080 |
| 6 | பூநகரி | பூநகரிகடற்றொழில் சமாசம் -மீன் உணவுஉற்பத்தியும் கழிவுநீர் சுத்திகரிப்புவசதி | 4.320 |
| 7 | | பூநகரிகடற்றொழில் சமாசம் -மீன் பதனிடல் மற்றும் விநியோகத்தல் | 15.700 |
| 8 | | விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் (வ-து)- Upgrade and expansion of fruit and vegetable processing facility | 12.700 |
| 9 | | விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் (வ-து) –சொட்டுநீர்ப்பாசனம்(Drip Irrigation for Banana and Papaya cultivation) | 2.496 |
| 10 | கண்டாவளை | கரைச்சிவடக்குப.நோ.கூ சங்கம் -அரிசிஆலை | 4.500 |
| 11 | | கரைச்சிவடக்குப.நோ.கூ சங்கம் -வெதுப்பகம் | 6.040 |
| 12 | பச்சிலைப்பள்ளி | பளைப.நோ.கூ சங்கம் -தேங்காய் எண்ணெய் உற்பத்தி | 3.000 |
| **மொத்தம்** | | | **97.905** |



கரைச்சிதெற்குப.நோ.கூ சங்கம் - சேதனப்பசளைஉற்பத்தி (Tractor, Two wheel trailer)



பூநகரிகடற்றொழில் சமாசத்திற்கானஉபகரணங்கள்



பூநகரிகடற்றொழில் சமாசம் -மீன் பதனிடல் மற்றும் விநியோகத்தல்



விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் (வ-து) – சொட்டுநீர்ப்பாசனம்

## மீள் குடியேற்றம் புனர் வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு. நீர்வழங்கல் திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்வழங்கல் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018ம் ஆண்டில் மீள்குடியேற்ற அமைச்சினால் 11.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ் வேலைத்திட்டத்தில் போரினால் கணவனை இழந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கிணறு அமைத்தலுக்காக தலா 125.000 பெறுமதியான 28 கிணறுகள் 3.5 மில்லியன் ரூபா செலவில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்டன. அத்துடன் மீள்குடியேற்றத்திற்குட்ட கரைச்சி, கண்டாவளை பிரதேசசெயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 568 குடும்பங்களுக்கு கிளிநொச்சிநகர நீர்வழங்கல் திட்டத்தின் மூலம் 8 மில்லியன் ரூபா செலவில் இலவச நீரிணைப்புக்கள் வழங்கப்பட்டன.





## சுகாதாரவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்திட்டம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அனைவருக்கும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2018ம் ஆண்டில் முதலாவதாக 39 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த திட்டமானது முன்னெடுக்கப்பட்டது.இந்த திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் இருந்தும் 640 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான மலசலகூடங்கள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. இந்த மலசல கூடங்களில் சாதாரண மலசலகூடங்களை விட விசேடமாக மாற்றுவலுவுள்ளோருக்கான மலசலகூடங்களும் அமைத்துக்கொடுக்கப்பட்டன.





## மாற்றுவலுவுள்ள பெண்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான சுகாதாரவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்திட்டம்

2018ம் ஆண்டில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் 6.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுகாதாரவசதிகளை ஏற்படுத்தும் மற்றுமொரு செயற்திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக

மாற்றுவலுவுள்ள பெண்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இந்த செயற்திட்டம் அமைந்திருந்தது.அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவையும் உள்ளடக்கியதாக 78 பயனாளிகள் பயன்பெறும் வகையில் இந்த திட்டமானது முன்னெடுக்கப்பட்டது.





## மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்திட்டம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்விப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அனைவருக்கும் மின்சார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2018ம் ஆண்டில் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த திட்டமானது முன்னெடுக்கப்பட்டது.இந்த திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் இருந்தும் 520 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

## சனாதிபதி செயலகத்தின் வேலைத்திட்டம்

## கிராமசக்தி மக்கள் இயக்கம் வேலைத்திட்டம்

மக்களுக்கு பாரிய அளவில் தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக்கொடுத்து வறுமையை ஒழிப்பதை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கிராமசக்தி வேலைத்திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மூன்று கிராம அலுவலர் பிரிவு வீதம் 12 கிராம அலுவலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 12 பிரிவுகளிலும் 12 கிராமசக்தி மக்கள் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு முதற்கட்டமாக ஒரு கிராமசக்தி சங்கத்திற்கு ஒரு மில்லியன் ரூபா வீதம் 12 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு 12 சங்கங்களினதும்

வங்கிக் கணக்கிற்கும் குறித்த நிதி வைப்பிலிடப்பட்டு சங்கங்களினால் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது

**கிராமசக்தி மக்கள் இயக்கம் வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய மட்டத்தில்**

- பலம் வாய்ந்த மக்கள் இயக்கங்கள் கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது
- அனைத்து கிராமங்களுக்கும் கிராம அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது
- கிராமிய மூலதனத்தினை வலுவூட்டும் கிராமிய சேமிப்பு முறமை உருவாக்கப்பட்டுள்ளது
- அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் கிராம மட்டத்தில் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.





**ச னாதிபதி செயலகத்தின் வேலைத்திட்டம்தேசிய போசாக்கு நிகழ்ச்சித்திட்டம்**

| இல | பிரதேச செயலாளர் பிரிவு | ஒதுக்கீடு | நிகழ்ச்சித் திட்டங்கள் | பங்குபற்றிய வர்கள |
|---|---|---|---|---|
| 1 | கரைச்சி | 81,780.00 | 14 | 722 |
| 2 | கண்டாவளை | 100,000.00 | 17 | 549 |
| 3 | பூநகரி | 76,100.00 | 7 | 350 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 89,900.00 | 3 | 350 |
| **மொத்தம்** | | **347,780.00** | **41** | **1971** |

## சனாதிபதி செயலகத்தின் வேலைத்திட்டம் சிறுநீரக நோய்த்தடுப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்

ஜனாதிபதி செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றான இந் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கென 75,000 ரூபா ஒதுக்கீடு கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிடைக்கப் பெற்றது. சிறுநீரக நோய்ப் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்களினை இனங்கண்டு அவர்களுக்குள்ள பிரச்சனைகள் மற்றும் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக மாவட்ட செயலகத்தினால் தரவுகளைப் பதியும் அலுவலர் ஒருவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டார். அவருக்கான 8 மாதங்களுக்குரிய வேதனமாக ரூபா 56,000 வழங்கப்பட்டது

### கம்பரெலிய

கம்பரெலிய வேலைத்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு 100 மில்லியன் ரூபா செலவில் 73 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நான்கு பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வீதிகள் சந்தைகள் குளங்கள் கோவில்கள் என்பன புனரமைக்கப்பட்டதுடன் 15 மின்சார இணைப்புக்களும் வழங்கப்பட்டன. 7 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகள் மாவட்ட செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 93 மில்லியன் பெறுமதியான வேலைகள் நான்கு பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டிற்கென கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களிற்கென தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் ரூபா. 12.123 மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. இக்கருத்திட்டங்கள் யாவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்தோடு மீள்குடியேற்றம் புனர்வாழ்வளிப்பு வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் அனுமதி பெறப்பட்ட பின்னரே அமுல்படுத்தபட்டன.

இவ்வேலைத்திட்டங்களானது கிராமிய சமூகத்திற்கான குடிநீர் விநியோகத்திட்டங்கள், கிராமிய மின் உற்பத்தித் திட்டங்கள் கிராமிய

போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் திட்டங்கள் வார சந்தைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் போன்ற இடங்களின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆரம்ப மற்றும் கனிஸ்ட பாடசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளுக்கான பௌதீக உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் பொது விளையாட்டு மைதானங்கள் மற்றும் நூலகங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல் சிறு நீர்ப்பாசன வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் முன்பள்ளிகள் சிறுவர் காப்பகங்கள் முதியோர் இல்லங்கள் பதிவுசெய்யப்பட்ட அறநெறிப்பாடசாலைகள் மத மற்றும் கலாசார நிலையங்கள் போன்றவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் மயானங்களைப் புனரமைத்தல் போன்ற கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் முன்னுரிமைபடுத்தப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி கண்டாவளை பூநகரி பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் பற்றிய விபரம்

| இல | பாராளுமன்ற உறுப்பினரின் பெயர் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | கௌரவ சிவஞானம் சிறீதரன் | 114 | 8.545 |
| 2 | கௌரவ எம்.ஏ.சுமந்திரன் | 4 | 0.953 |
| 3 | கௌரவ பிமல் ரத்நாயக்கே | 6 | 0.75 |
| 4 | கௌரவ தர்மலிங்கம் சித்தார்தன் | 5 | 0.7 |
| 5 | கௌரவ டக்ளஸ் தேவானந்தா | 6 | 0.625 |
| 6 | கௌரவ விஜயகலா மகேஸ்வரன் | 1 | 0.3 |
| 7 | கௌரவ அங்கஜன் இராமநாதன் | 8 | 0.25 |
| **மொத்தம்** | | **144** | **12.123** |

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கென பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக விடுவிக்கப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம்

| இல | பிரதேசசெயலாளர் பிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | கரைச்சி | 59 | 5.7175 |
| 2 | கண்டாவளை | 23 | 1.453 |
| 3 | பூநகரி | 36 | 2.9025 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 26 | 2.05 |
| | மொத்தம் | 144 | 12.123 |

### பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள்





விளையாட்டு முற்றம் அமைத்தல்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள்





சமையல் அறை நிர்மாணித்தல் - ஆராத்திநகர்



கொடுக்குளாச்சி ஐயனார் கோவில் - கிளாலி



விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் - ஆதவன் விளையாட்டுக்கழகம்

## கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள்

கௌரவ சி.சிறீதரன் (பா.உ) அவர்களால் காகிதாதிகள் மற்றும் தளபாடங்கள் வழங்கப்பட்டவற்றில் சில...



## உலக உணவுத்திட்ட காசுக்கான வேலைத்திட்டம்

இவ் வேலைத்திட்டமானது எதிர்காலத்தில் வறட்சி அனர்த்தத்தினை குறைக்கும் பொருட்டு பளை பிரதேச செயலர் பிரிவில் கீழ்வரும்திடடங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் விபரங்கள் வருமாறு.





## சமூக நீர் சேகரிக்கும் திட்டம்





## இளைஞர் யுவதிகளுக்கான திறன் அபிவிருத்தி தொடர்பாக

## வீட்டுமின்னிணைப்பு பயிற்சிநெறி





## தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சின் வேலைத்திட்டங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை அமுல் படுத்துவதற்காக தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சினால் 2018 ம் ஆண்டில் ரூபா 103.159 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டதோடு அதில் ரூபா 61.725மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. குறித்த வேலைத்திட்டத்திற்கான மிகுதி ஒதுக்கீடானது (ரூபா 41.434 மில்லியன்) தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சினால் விடுவிக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டமானது கரைச்சி கண்டாவளை பூநகரி பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் பனை சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்தல் மீன்பிடித்தொழிலை மேம்படுத்தல் சுற்றுலாத்துறை அபிவிருத்தி சுகாதாரத்துறை அபிவிருத்தி சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி வாழ்வாதாரத்திற்கான உட்கட்டுமான வசதிகளை

ஏற்படுத்தல் சிறிய உற்பத்தி ஆலை போன்ற கட்டடங்களை அமைத்தல் ஆகிய பரப்புக்களில் சமூக நலன்புரி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

## துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய சுருக்கம்

| தொ. இல | துறை | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட மொத்த நிதி |
|---|---|---|---|
| 1 | மீன்பிடி | 02 | 5.008 |
| 2 | சுகாதாரம் | 10 | 42.51 |
| 3 | வாழ்வாதார அபிவிருத்தி | 05 | 37.75 |
| 4 | சிறிய நீர்ப்பாசனம் | 01 | 15.87 |
| 5 | சுற்றுலாத்துறை | 01 | 2.01 |
| மொத்தம் | | 19 | 103.15 |

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றிய சுருக்கம்.

| தொ. இல | பிரதேச செயலர் பிரிவு | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட மொத்த நிதி |
|---|---|---|---|
| 1 | கரைச்சி | 12 | 69.51 |
| 2 | கண்டாவளை | 01 | 10.57 |
| 3 | பூநகரி | 04 | 10.21 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 02 | 12.85 |
| **மொத்தம்** | | **19** | **103.15** |

## தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்தற்குமான அலுவலக வேலைத்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலக வேலைத்திட்டத்தினை அமுல் படுத்துவதற்காக தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சினால் 2018 ம் ஆண்டில் ரூபா 92.28 மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டமானது கரைச்சி பிரதேச செயலர்

பிரிவில் பாரதிபுரம் மாயவனூர் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பிரமந்தனாறு பரந்தன் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஞானிமடம் மட்டுவில்நாடு மேற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் கிளாலி கோவில்வயல் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வேலைத்திட்டமானது வீதி புனரமைப்பு சிறு பாலங்கள் அமைத்தல் நீர் வழங்கல் மற்றும் கால்வாய்கள் புனரமைத்தல் சுகாதார வசதிகளை மேம்படுத்தல் பாடசாலைகளில் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தல் வாழ்வாதாரத்திற்கான உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தல் தொழிற்பயிற்சி நிலையங்கள் சிறிய உற்பத்தி ஆலை போன்ற கட்டடங்களை அமைத்தல் குடிநீர் சுத்திகரிப்பு தொகுதிகளை அமைத்தல் போன்ற சமூக நலன்புரி திட்டங்கள் ஆகிய விடயங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

### துறை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம். (ONUR-2018)

| தொ. இல | துறை | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட மொத்த நிதி (ரூபா, மில்) |
|---|---|---|---|
| 1 | விவசாயம் | 1 | 4.00 |
| 2 | மீன்பிடி | 1 | 4.50 |
| 3 | கல்வி | 1 | 4.20 |
| 4 | சுகாதாரம் | 1 | 0.50 |
| 5 | வாழ்வாதார அபிவிருத்தி | 10 | 34.00 |
| 6 | சிறிய நீர்ப்பாசனம் | 3 | 11.00 |
| 7 | வீதி அபிவிருத்தி | 7 | 22.00 |
| 8 | நீர்வழங்கல் | 3 | 12.08 |
| **மொத்தம்** | | **27** | **92.28** |

## பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு பற்றிய விபரம்

| தொ. இல | பிரதேச செயலர் பிரிவு | வேலைத்திட்டங் களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட மொத்த நிதி |
|---|---|---|---|
| 1 | கரைச்சி | 10 | 31.20 |
| 2 | கண்டாவளை | 2 | 14.00 |
| 3 | பூநகரி | 9 | 26.08 |
| 4 | பச்சிலைப்பள்ளி | 6 | 21.00 |
| **மொத்தம்** | | **27** | **92.28** |

## வாழ்வாதார வேலைத்திட்டம்

இத்திட்டத்தின்கீழ் பயனாளி ஒருவருக்கு அதிபட்ச வாழ்வாதார உதவியாக 100000 ரூபாய் பெறுமதியான உதவிகள் வழங்குவதற்கு மேற்படி அமைச்சின் ஊடாக ஐந்து (5) மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் விசேடமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை உறுப்பினராகக்கொண்ட குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அந்தவகையில் 50 குடும்பங்களின் பொருளாதார நிலமைகளை பரிசீலிக்கப்பட்டு முன்னுரிமைப்படுத்தப்பட்டன.

எனவே 2018ம் ஆண்டில் மொத்தமாக 510 பயனாளிகளுக்கு தலா 100,000 ரூபாய் வீதம் 51 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் 2018 ஆம் வருடத்தில் வேலைத் திட்டங்களுக்காக ரூபா 12 மில்லியன் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன

| பிரதேச செயலாளர் பிரிவு | வேலைத்திட்டத்தின் விபரம் | மொத்தத் தொகை ரூபா |
|---|---|---|
| கரைச்சி | கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கான கலையரங்கு அமைத்தல் | 7,000,000.00 |
| | மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்தல் | 3,035,000.00 |
| | கிளிநொச்சி மாவட்ட தமிழ் சங்கத்திற்கான கட்டடம் அமைத்தல் | 2,000,000.00 |
| | கிளி/சென்திரேசா பாடசாலைக்கான பல்லுடக கருவி வளங்கல் | 200,000.00 |
| **மொத்தம்** | | **12,235,000.00** |

## பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக 2018 ம் ஆண்டில் ரூபா 45.9 மில்லியன் ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டது. இவ் வேலைத்திட்டமானது கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்கள் பிரிவிகளில் வாழ்வாதார திட்டம் மற்றும் உட்கட்டுமான (வீதி புனரமைப்பு மற்றும் பயிற்சி நிலையம் அமைத்தல்) வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியன நடைமுறுப்படுத்தப்பட்டது.

1. **வாழ்வாதாரம்**

ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 100000.00 ரூபா வீதம் வழங்கப்பட்டது. அதற்கமைய

- கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 42 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டது. (மாடு வளர்ப்பினை வலுவூட்டும் செயல் திட்டத்திற்கு 12 பயனாளிகளும் ஆடு வளர்ப்பிற்கு 10 பயனாளிகளும் கோழிவளர்ப்பிற்கு 20 பயனாளிகள்)
- கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 30 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டது. (மாடு வளர்ப்பினை வலுவூட்டும் செயல் திட்டத்திற்கு 10 பயனாளிகளும் ஆடு வளர்ப்பிற்கு 10 பயனாளிகளும், கோழி வளர்ப்பிற்கு 10 பயனாளிகள்)

- பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 22 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டது. (மாடு வளர்ப்பினை வலுவூட்டும் செயல் திட்டத்திற்கு 6 பயனாளிகளும், ஆடு வளர்ப்பிற்கு 6 பயனாளிகளும் கோழிவளர்ப்பிற்கு 10 பயனாளிகள்)
- பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 6 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டது. (மாடு வளர்ப்பினை வலுவூட்டும் செயல் திட்டத்திற்கு 2 பயனாளிகளும், ஆடு வளர்ப்பிற்கு 4 பயனாளிகளும்)

## உட்கட்டுமான அபிவிருத்தி

உட்கட்டுமான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகங்களில் கீழ்வரும் வேலைகளிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகள் பூரணப்படுத்தப்பட்டது.

| தொ. இல | பிரதேச செயலாளர் பிரிவு | **செயற்திட்டம்** | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | கரைச்சி | சோலைநகர் ஊற்றுப்புலம் வீதி அமைத்தல் | 21.0 |
| 2 | பச்சிலைப்பள்ளி | திறன் பயிற்சி நிலையம் அமைத்தல் | 4.9 |
| | **மொத்தம்** | | **25.9** |

## கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்திமற்றும் கிராமியபொருளாதாரஅமைச்சு

**மொத்ததிட்டங்கள்:** 03**மீனவர்பொதுநோக்குமண்டபம்**

மீனவர்பொதுநோக்குமண்டபம் செபஸ்தியார்புரம்முழங்காவில். மீனவர்பொதுநோக்குமண்டபம் கிளாலி





**வீதிபுனரமைப்பு**

**திட்டம்:- ஊற்றுப்புலம் வள்ளுவர்பண்ணைவீதி**




### 5.3.2 புனர்வாழ்வு அதிகாரசபையின் செயற்பாடுகள்

**01.பொதுமக்கள் சொத்திழப்புக் கொடுப்பனவு (100,00.00)**

| பிரிவு | பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | கொடுப்பனவு செய்யப்பட்டவை | கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| கரைச்சி | - | 3397 | 226,529,295.00 |
| கண்டாவளை | 495 | | |
| பூநகரி | - | | |
| பச்சிலைப்பள்ளி | - | | |

**2.பொதுமக்களுக்கான சுயதொழில் கடன் திட்டம்**

| பிரிவு | பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | கொடுப்பனவு செய்யப்பட்டவை | கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| கரைச்சி | 62 | 45 | 1,035,700,000.00 |
| கண்டாவளை | - | | |
| பூநகரி | 36 | | |
| பச்சிலைப்பள்ளி | 55 | | |
| **மொத்தம்** | 153 | | |

**3.புனர்வாழ்வு பெற்றவர்களுக்கான சுயதொழில் கடன் திட்டம்**

| பிரிவு | பெற்றுக்கொள்ளப் பட்ட விண்ணப்பங்கள் | **கொடுப்பனவு செய்யப்பட்டவை** | **கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை** |
|---|---|---|---|
| கரைச்சி | 10 | 21 | 5.70ml |
| கண்டாவளை | 09 | | |
| பூநகரி | 15 | | |
| பச்சிலைப்பள்ளி | 06 | | |
| **மொத்தம்** | 40 | | |

04. **போரினால் பாதிப்படைந்த ஆலயங்களை புனரமைப்பு செய்தல்**
போரினால் பாதிப்படைந்த ஆலயங்களை புனரமைப்பு செயவதற்காக தலா 1,000,000 வரை ஆலயங்களுக்கு வழங்கப்படுகிறது.

| பிரிவு | **அனுப்பப்பட்ட விண்ணபபபடிவங்கள்** | **கொடுப்பனவு செய்யப்பட்டவை** | **கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை** |
|---|---|---|---|
| கரைச்சி | 03 | 51 | 8,834,500.00 |
| கண்டாவளை | - | | |
| பூநகரி | 03 | | |
| பச்சிலைப்பள்ளி | 19 | | |
| **மொத்தம்** | 25 | | |

5.**போரினால் இறந்த காயமுற்ற பயனாளிகளுக்கான கொடுப்பனவு**
போரினால் இறந்தவர்களுக்கான நட்ட ஈடாக சாதாரண பொதுமக்களுக்கு ரூபா 100,000 ம். அரச ஊழியருக்கு 150,000 வழங்கப்படுகிறது.
காயமடைந்தவர்களில் சாதாரண பொதுமக்களுக்கு ரூபா 50,000 ம் அரச ஊழியர்களுக்கு ரூபா 100,000 வழங்கப்படுகிறது.

| பிரிவு | **அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள்** | **கொடுப்பனவு செய்யப்பட்டவை** | **கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை** |
|---|---|---|---|
| கரைச்சி | 70 | 447 | 25,840,000.00 |
| கண்டாவளை | 25 | | |
| பூநகரி | - | | |
| பச்சிலைப்பள்ளி | - | | |
| **மொத்தம்** | 95 | | |

6.**அரச ஊழியருக்கான சொத்திழப்புக் கொடுப்பனவு**

அரச ஊழியருக்கான சொத்திழப்புக் கொடுப்பனவாக ரூபா 150,000 வழங்கப்படுகின்றது.

| கொடுப்பனவு செய்யப்பட்டவை | கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை |
|---|---|
| 553 | 7,6920,000.00 |

**சுயதொழில் கடன் திட்டம்**






**போரினால் பாதிப்படைந்த ஆலயங்களை புனரமைப்பு செய்தல்**






### 5.3.3 கிராம அபிவிருத்தி திணைக்கள செயற்பாடு

வடமாகாண சபையின் கீழ் இயங்கும் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

- கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவிலும் 170 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 158 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கிராம மட்டத்தில் சிறப்பாக இயங்கும் சமூக மட்ட அமைப்பாக உள்ளன. பதிவு செய்யப்பட்டு இயங்கு நிலையில் உள்ள சங்கங்களின் விபரம் - 2018

| தொ.இல | பி.செ.பிரிவு | RDS | WRDS | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கரைச்சி | 80 | 70 | 150 |
| 2 | கண்டாவளை | 26 | 26 | 52 |
| 3 | பூநகரி | 24 | 21 | 45 |
| 4 | பச்சிளைப்பள்ளி | 40 | 41 | 81 |
| | **மொத்தம்** | **170** | **158** | **328** |

- **மகளிர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள்:-**

கிளிநொச்சி மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் கிராமப்புற யுவதிகளை சுயதொழிலில் ஊக்குவிக்கும் முகமாகவும், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கும் பெண்களுக்கும் உதவும் நோக்குடன் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினை நிறுவி மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் ஊடாக கிராமத்தில் பெண்கள் சார்பான பல தரப்பட்ட ஆடை வடிவமைத்தல், கைவேலை.மனைப்பொருளியல், அழகியல் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தல் கண்டாவளை, பூநகரி, பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் தலா 20 மாணவர்கள் வீதம் 60 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர். இவர்களுக்கு 12 மாத காலத்தினைக் கொண்ட மனைப்பொருளியல் டிப்ளோமா பாடத்திட்டம் எனும் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாணவர்களுக்கும் நாள் ஒன்றுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 100.00 வழங்கப்படுகின்றது. பயிற்சியின்

முடிவில் அனைத்து பிரதேச செயலக பிரிவிலும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு, இறுதியாக கண்காட்சியும் பிரதேச மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்றது.

### ❖ NVQ நிலைய செயற்பாடுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, பச்சிளைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களில் 20 பேருக்கு ஒவ்வொரு வருடமும் NVQ நிலையத்தினூடாக மேலதிகப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் அடிப்படையில் வடமாகாணத்திலுள்ள NVQ நிலையங்களில் சிறப்பாக இயங்கும் NVQ நிலையத்திற்கான விருதினை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி NVQ நிலையம் பெற்றுக்கொண்டது.

ஆடை வடிவமைத்தலுக்கான தேசிய வாழ்க்கை தொழில் தகைமை சான்றிதழ் கற்கை நெறி வழங்கிய பின்னர் ஆடைத் தொழிற்சாலைகளில் அல்லது தகுதி வாய்ந்த தையல் பயிற்சி நிலையங்களில் இணைந்து பயிற்சி பெற்று 3 ஆம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவினால் கண்காணிக்கப்பட்டு தேசிய வாழ்க்கை தொழில் தகைமை சான்றிதழ் தரம் 4 இல் இணைந்து படிப்படியாக 7 வரை சென்று முறைசாரா பட்டதாரி எனும் நிலை அடையக்கூடிய பயிற்சி நெறி வழங்கப்பட்டு வருகின்றது. வருடாந்தம் 40 மாணவர்கள் பயிற்சி பெற்று வெளியேறுகின்றனர்.

### ❖ வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தகவல் முறைமை (Web Based Information System)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் இணையத்தகவல் முறைமை (**Web Based Information System**) மூலம் தேவையான விடயங்களை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்

- ❖ பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் (Registered Society
- ❖ பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் நிர்வாக விபரங்கள் (Committee Details for Registered Society )
- ❖ பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்து விபரம்.

- ◈ சங்கங்களின் மற்றும் சங்க அங்கத்தவர்களின் தரமான உற்பத்திகள் தொடர்பான தகவல்களின் விபரம்.
- ◈ திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கிராம மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பதிவு இலக்கத்தினுடனான விபரங்கள்.
- ◈ தரவிறக்கம் செய்யக்கூடிய வசதி.
- ◈ யாப்பு விதிகள்.
- ◈ பயிற்சி விண்ணப்பங்கள்.
- ◈ பதிவுச் சான்றிதழ்.
- ◈ திணைக்கள சுற்று நிருபங்கள்.

என்பன உள்ளடக்கப்பட்டதான பொது மக்களின் பார்வைக்கு என உருவாக்கப்பட்டு சிறப்பாக செயற்படுகின்றது.

### 5.3.4 சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் செயற்பாடு-

- ◈ சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி வழங்கள்
- ◈ சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு வங்கி ஊடாக கடன் வழங்கள்
- ◈ சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்சிதிட்டம் வழங்கள

i. EDP- முயற்சியாண்மை அபிவிருத்தி செயற் திட்டம

ii. Managetment Information System – முயற்சியாளர்களுக்கான வியாபார வழிகாட்டல்

**2018ம் ஆண்டிற்கான பயிற்சிநெறிகளின் விபரம் கீழ் வருமாறு**

- ◈ தையல் (சாறி சட்டை) – கரைச்சி,கண்டாவளை,பூநகரி,பளை
- ◈ வியாபார வழிகாட்டல் பயிற்சி நெறி – பளை, கரைச்சி, பூநகரி

**விழிப்புணர்வு நிகழ்சி திட்டம்** -2018

**வங்கி கடன் திட்டம் (துறுணு திரிய)** -2018 38.2M

### 5.3.5 தொழிற்துறைத் திணைக்களம் செயற்பாடுகள்

- ◈ தும்பு உற்பத்தியும் பயிற்சியும்.
- ◈ பாரம்பரிய சிறு கைத்தொழில் பயிற்சி.
- ◈ ஏனைய பாரம்பரியமற்ற தொழிற்பயிற்சிகள். (தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சிநெறி, பற்றிக் பயிற்சிநெறி,

கடதாசியினாலான பொருட்கள் உற்பத்தி பயிற்சிநெறி, பனை ஓலை சார்ந்த பொருட்கள் உற்பத்தி பயிற்சிநெறி, சாறி பிளவுஸ் கட்டிங் பயிற்சிநெறி, மெழுகுதிரி, ஜோக்கற் உற்பத்தி பயிற்சி நெறிகள்)

2018ம் ஆண்டில் தொழிற்துறைத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட தொழிநுட்ப பரிமாற்ற பயிற்சிநெறிகளின் விபரம் கீழ்வருமாறு.

- பனை ஓலை சார்ந்த பொருட்கள் உற்பத்தி
- தையல் இயந்திரம் திருத்தம்
- சாறி பிளவுஸ் கட்டிங்
- கடதாசியினாலான பொருட்கள் உற்பத்தி
- பனை ஓலை சார்ந்த பொருட்கள் உற்பத்தி
- ஜோக்கற் உற்பத்தி, பயிற்சி நெறி
- மெழுகுதிரி உற்பத்தி பயிற்சி நெறி

## தொழில் முயற்சி சார்ந்த சேவைகள் 2018

- தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கல். – மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி
- தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கல். – கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் மூலதன நன்கொடை.
- எமது கைத்தறி நெசவு நிலையத்தில் கைத்தறி நெசவு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை.
- எமது கைத்தறி நெசவு நிலையத்தில் கைத்தறி நெசவு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை.
- எமது தும்பு உற்பத்தி நிலையத்தில் தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டமை.
- எமது தும்பு உற்பத்தி நிலையத்தில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டமை
- புது வருடத்தை முன்னிட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு சிறப்பு சந்தை ஒழுங்கமைக்கப்பட்டம

- மாகாண கைத்தொழில் கண்காட்சி மூலம் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தமை.
- சில்ப கண்காட்சி மூலம் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டமை

### 5.3.6 வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகள்

சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சின் கீழ் இயங்கும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமானது வறுமை தணிப்பு மற்றும் சமூக அபிவிருத்தி ஊடாக தேசிய உற்பத்திக்கு காத்திரமான பங்களிப்பினை வழங்குவதை நோக்காக கொண்டு செயற்ப்பட்டு வருகிறது இந்நோக்கத்தினை அடையும் பொருட்டு கீழ்வரும் பிரிவுகளில் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்திலும் செயற்பட்டு வருகின்றது கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேசசெயலகங்களின் ஊடாக 7 சமுர்த்தி சமுதாய வங்கிகளை அமைத்து இவ்வங்கிகளின் ஊடாக கிளிநொச்சி மாவட்ட மக்களின் வறுமையினை தணிப்பதற்காக வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அவைபின்வருமாறு

- வங்கி மற்றும் குறுநிதிப்பிரிவு
- கிராம அபிவிருத்தி மற்றும் சூழல்பாதுகாப்பும்
- சமூகப்பாதுகாப்பும் நலனுதவியும்
- விற்பனை அபிவிருத்தி வேலைத்திட்டம்
- சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு

### சமூகஅபிவிருத்தி பிரிவு

சமூகவலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டியமரபுரிமைகள் அமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் எமது மாவட்டத்திற்கான சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக இவ்வாண்டில் 39,840,319.00 ரூபா ஒதுக்கப்பட்டு இவ் வேலைத் திட்டங்களுக்காக முழுவதுமாக செலவு செய்யப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியானது சமூகஅ பிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக

01. போதைப் பொருள் மற்றும் புகைத்தல் தடுப்பு ஆத்மீக அபிவிருத்தி ஊடாக மகிழ்ச்சியான குடும்ப வேலைத்திட்டம்

02. சிறுவர் பாதுகாப்பு சிறுவர் கழகம் மற்றும் கலாசார வேலைத்திட்டம்

03. உளவளத்துணையும்தொழில்வழிகாட்டலும்

04.சமுர்த்தி பசுமை வெகுமதி மரநடுகை வேலைத்திட்டம்

05. திரியபியசவீடமைப்புவேலைத்திட்டம்
06. முன்னேற்றமீளாய்புநடவடிக்கைகள்
07. பசுமைபூங்காவேலைத்திட்டம்
08. சிறுவர்நிகழ்ச்சித்திட்டம் (கெக்குழு)
09.சிறுவர் கழக நூலக வேலைத்திட்டம்

2018ம் ஆண்டு சிறுவர் கழக கலாசார இலக்கியப் போட்டிகள் கிளிநொச்சி மாவட்டத்தின் கெக்குழு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகள் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. இப் போட்டி நிகழ்வில் 250 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். பேச்சு, அறிவிப்பு, சிறுகதை, ஓவியம், கிராமியநடனம், தனிப்பாடல், நாட்டார்பாடல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடம் பெற்ற மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

## சமுர்த்தி நலனுதவி மற்றும் சமுக பாதுகாப்பு கொடுப்பனவு

தொழில்,தொழில் சங்க உறவுகள் மற்றும் சமுக வலுவூட்டல் அமைச்சின் கீழுள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் எமது மாவட்டத்தில் இவ்வாண்டில் மாத்திரம் நலனுதவி கொடுப்பனவாக ரூபா 389.07 மிலலியன் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இவ் கொடுப்பனவானது பின்வரும் அடிப்படையில் வழங்கப்பட்டுவருகிறது

### நிவாரண_கொடுப்பனவு விபரம்

| தொ. இல | பிரதேசசெயலகம் | பயனாளிகளின்எண்ணிக்கை-மார்கழி 2018 | | | |
|---|---|---|---|---|---|
| | | 1500/= | 2500/= | 3500/= | மொத்தம் |
| 01 | கரைச்சி | 1376 | 1010 | 3720 | 6106 |
| 02 | கண்டாவளை | 911 | 392 | 1212 | 2515 |
| 03 | பூநகரி | 587 | 317 | 1084 | 1988 |
| 04 | பச்சிலைப்பள்ளி | 318 | 149 | 451 | 918 |
| மொத்தம் | | 3192 | 1868 | 6467 | 11527 |

## சமுக பாதுகாப்பு கொடுப்பனவு விபரம் - 2018

| தொ.இ | விபரம் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | பிறப்பு | 147 | 1,102,500.00 |
| 02 | இரட்டை பிறப்பு | 139 | 695,000.00 |
| 03 | திருமணம் | 308 | 2,310,000.00 |
| 04 | வைத்தியசாலை-நோய் | 727 | 1,853,750.00 |
| 05 | இறப்பு | 168 | 2,520,000.00 |
| 06 | சிப்தொர 2016-2018 | 1868 | 2,802,000.00 |
| 07 | சிப்தொர 2017-2019 | 3969 | 5,953,500.00 |
| 08 | சிப்தொர 2018-2020 | 1592 | 2,388,000.00 |
| 09 | சிப்தொர நேர்முகத் தேர்வு | - | 23,624.00 |
| 10 | தரகு மற்றும் காகிதாதி | - | 746,312.55 |
| மொத்தம் | | 8918 | 20,394,686.55 |

## சமுக அபிவிருத்தி வேலைத்திட்ட செலவு விபரம்

| தொ. இல | வேலைத்திட்டம் | தொகை |
|---|---|---|
| 01 | நிவாரணகொடுப்பனவு | 391,446,000.00 |
| 02 | வீட்டுலொத்தர் | 8,000,000.00 |
| 03 | திரியபியசவீட்டுத்திட்டம் | 1,200,000.00 |
| 04 | புகைத்தல்எதிர்ப்புமற்றும்மகிழ்ச்சியானகுடும்பம் | 180,000.00 |
| 05 | உளவளத்துணையும்தொழில்வழிகாட்டலும் | 96,000.00 |
| 06 | கெக்குழுசிறுவர்கழககலாசாரஇலக்கியபோட்டிகள் | 86,000.00 |
| 07 | சர்வதேசஞாபகார்த்ததினங்கள் | 72,000.00 |
| 08 | பசுமைப்பூங்காவேலைத்திட்டம் | 240,000.00 |
| 09 | முன்னேற்றமீளாய்வுகூட்டம் | 38,500.00 |

## வங்கிக் குறுநிதிப்பிரிவு

வருமானம் குறைந்த மக்களின் சேமிப்பு பழக்கத்தை விருத்தி செய்வது மற்றும் அவர்களின் வாழ்வாதார செயற்பாடுகளுக்கு மூலதன பங்களிப்பினை வழங்குவது இதன் தொழிற்பாடகும். கிளிநொச்சி மாவட்டத்தின் இவ் வேலைத்திட்டத்தின் பொருட்டு 07 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளும் 04 சமுர்த்தி வங்கிச் சங்கங்களும் உருவாக்கப்பட்டு மக்களின் சேமிப்பு பழக்கத்தை மேற்படுத்துவதுடன் வாழ்வாதார முயற்ச்சிகளுக்கு கடன்களையும் வழங்கி வருகிறது. இம்மாவட்டத்தின் 2013 ம் ஆண்டிலிருந்து இவ்வங்கிகள் 2018 ம் ஆண்டின் இறுதியில் ரூபா 635.4 மில்லியனை சேமிப்பாக திரட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 23552 பேருக்கு 1022.2 மில்லியன் ரூபாவினை வாழ்வாதார கடன்களையும் வழங்கியுள்ளது.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்களானது இப் பிரதேச மக்களின் சமூக அபிவிருத்திச் செயற்பாடகளுக்கு மேலதிகமாக சமுர்த்தி வங்கிகளுக்கு முதலீட்டு வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாக செயற்படுகின்றது. இந்த வகையில் 2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ரூபா 177 மில்லியன் ரூபாவினை சமுர்த்தி வங்கிகள் சார்பாக ஏனைய அரச வங்கிகள் முதலீடு சேய்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்

சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் இப்பிரதேச மக்களின் சமுக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக சமுர்த்தி வங்கிகளுக்கு முதலீட்டு வாய்ப்பினை வழங்கும் நிறுவனமாக செயற்படுகின்றது. இந்த வகையில் 2018 ஆண்டின் இறுதிப் பகுதியில் ரூபா184 மில்லியன் ரூபாவினை சமுர்த்தி வங்கிகள் சார்பாக ஏனைய அரசவங்கிகள் முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

| தொ. இல | கடன்வகைகள் | கடன்களின்எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | சுயதொழில் | 3,240 | 15,591,711.00 |
| 02 | சகணஅருண | 5 | 81,786.00 |
| 03 | மீன்பிடி | - | - |

| | | | |
|---|---|---|---|
| 04 | ரட்டவிருவ | 3 | 287,150.00 |
| 05 | வாழ்வாதாரம் | 5055 | 233,538,070.00 |
| 06 | ஜீவனோபாயம் | 443 | 10,574,760.00 |
| 07 | திரியசவிய | 314 | 4,929,809.00 |
| மொத்தம் | | 9060 | 265,003,286.00 |

## சேமிப்புக்கள்

சமுர்த்தி வங்கிகளில் ஒன்பது வகையான வைப்புக்கள் காணப்படுகின்றது. அந்த வகையில் வறிய மக்களின் எதிர்கால வறுமையை குறைத்து சேமிப்பு ஆற்றலை அதிகரித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல். அந்த வகையில் சேமிப்பானது

வங்கி மூலமும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமும் களத்தில் சேகரிக்கப்படுவதன் மூலமும் வைப்பிலிடப்படுகிறது. விபரங்கள் பின்வருமாறு

| தொ. இல | வைப்புக்களின் வகைகள் | கணக்ககளின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | பங்கு | 25916 | 143.2 |
| 02 | அங்கத்தவர் | 25916 | 70.2 |
| 03 | அங்கத்தவர் அல்லாதோர் | 8089 | 10 |
| 04 | திரியமாதா | 4402 | 18 |
| 05 | சிறுவர் | 3138 | 33 |
| 06 | சிசுறக்க | 3654 | 137 |
| 07 | குழு | 5104 | 211 |
| 08 | கட்டாய சேமிப்பு | 14968 | 13 |
| 09 | நிலையாக வைப்பு | 0 | 0 |
| மொத்தம் | | 91187 | 635.4 |

## கடன் வகைகள்

சமுர்த்தி வங்கிகளில் சில வகையான கடன்கள் காணப்படுகின்றது. இந்த வகையில் வறிய மக்களின் சுயதொழிலை ஊக்குவித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் எமது மாவட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்ற கடன்களில் விபரங்கள் பின்வருமாறு

- சுயதொழில்
- நுகர்வுக்கடன்
- ஜீவனோபாய
- இடர்கடன்
- வாழ்வாதர சுழற்சி நிதிக்கடன்
- வாழ்வாதார அபிவிருத்தி கடன்
- ரட்டவிருவ
- திரிய சவிய
- சகன அருன

## சமுதாயமட்டஅமைப்புக்கள்

சமுர்த்தி வங்கி வலயங்களுக்கு உட்பட்டதாக 502 அமைப்புக்களும் குழுக்களும் காணப்படுகின்றன. விபரங்கள் பின்வருமாறு

| தொ. இல | வங்கி | சமுதாயஅமைப்புக்களின்எண்ணிக்கை | குழுக்களின்எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கிளிநகர் | 119 | 1,099 |
| 02 | வட்டக்கச்சி | 61 | 517 |
| 03 | ஸ்கந்தபுரம் | 75 | 517 |
| 04 | கண்டாவளை | 112 | 972 |
| 05 | பச்சிலைப்பள்ளி | 46 | 508 |
| 06 | ஜெயபுரம் | 55 | 521 |
| 07 | பூநகரி | 34 | 299 |
| மொத்தம் | | 502 | 4,643 |

## சமுதாய மட்ட அமைப்பு பிரிவின் வேலைத்திட்டம் - 2018

| தொ.இ | வேலைத்திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 01 | **மக்கள் பயிற்றுனர் ஊடான விழிப்பூட்டல்** | 286,650.00 |
| 02 | **மாணவர்களக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கள்** | 132,500.00 |
| 03 | **மாவட்ட கூட்டம்** | 30,240.00 |
| | **மொத்தம்** | **449,390.00** |

## கருத்திட்டப்பிரிவு

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2018ம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிராம அபிவிருத்தி மற்றும் சூழல் பாதுகாப்புப் பிரிவினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகிறது அந்தவகையில் சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் ஊடாக சமுர்த்தி நலனுதவி பெறும் குடும்பங்களின் ஒரளவு மேம்பட்ட குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கான நிலையான தொழில் வாய்பினை வழங்கும் நோக்கில் அவர்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்கியுள்ளது அந்தவகையில் குறித்த பிரிவிற்கு 2018 ஆண்டு 14.68 மில்லியன் நிதியானது எமது மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது அந்நிதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை வலுப்படுத்துவதற்கான வாழ்வாதார நடவடிக்கையின் பொருட்டு 4.05 மில்லியன் வழங்கப்பட்டதுடன் 1.7 மில்லியன் ரூபா விற்பனை அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காகவும் மேம்படுத்துவதற்காக இவ்வாண்டு வழங்கப்பட்டதுடன் வீடமைப்பு வேலைத்திட்டத்திற்காக 0.1 மில்லியன் ரூபாவும் கிடைக்கப் பெற்றது. மற்றும் மாவட்டத்தில் சிறந்த மாதிரி கிராமங்கள் இரண்டை அமைப்பதற்காகவும் அங்குவதியும் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டும் 8 மில்லியன் ரூபா நிதியும் கிடைக்கப்பெற்று வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது .

| இல | கிராமத்தின்பெயர் | கருத்திட்டத்தின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | மலையாளபுரம் | | 4,000,000.00 |
| 02 | கிருஸ்ணபுரம் | | 4,000,000.00 |
| **மொத்தம்** | | | 8,000,000.00 |

## சமுர்த்தி மாதிரி வீட்டுத்தோட்டம் 0.9மில்லியன்

| பி.செயலகம் | கருத்திட்டம் | கருத்திட்டங்களின்எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| கரைச்சி | விவசாயம் | 42 | 320,000.00 |
| கண்டாவளை | | 16 | 190,000.00 |
| பச்சிலைப்பள்ளி | | 18 | 200,000.00 |
| பூநகரி | | 19 | 205,000.00 |
| மாவட்டசெயலகம் | | 186 | 22,100.00 |
| மொத்தம் | | 281 | 937,100.00 |

### 5.3.7. மாவட்ட விவசாய திணைக்கள பிரிவின் செயற்பாடுகள்.

## தேசிய உணவு உற்பத்தி செயற்திட்டம் - ஜனாதிபதி செயலகம்
## நிதி ஒதுக்கீடு – 8.815 மில்லியன்

**பொதி கொள்கலன்களில் மரக்கறிச்செய்கையை மேம்படுத்தல்.**

1. **பூநகரி,கரைச்சி, பிரதேச செயலக பிரிவுகளில். 500 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 70% மானிய அடிப்படையில் ஒவ்வொரு பயனாளிக்கும் 150 பொதி பை மற்றும் கறிமிளகாய், புசிற்ரா, தக்காளி, வெண்டி,மிளகாய், புடோல் போன்ற மரக்கறி விதைகளும் வழங்கப்பட்டன. இது தொடர்பாக நடாத்தப்பட்ட 16 பயிற்சி வகுப்புக்களில் 514 பயனாளிகள் பங்குபற்றி பயன்பெற்றனர். இத்திட்டத்திற்கான மொத்த செலவீனம் - ரூபா 1.73 மில்லியன்.**

| பிரதேச செயலக பிரிவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 347 |
| பூநகரி | 153 |




2. **நுண் நீர்ப்பாசனத் தொகுதியின் கீழ் மிளகாய்ச்செய்கஊக்குவித்தல்.**

மிளகாய் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 115 பயனாளிகளுக்கு ¼ ஏக்கர் செய்கைக்கான நுண் நீர்ப்பாசனத் தொகுதிகள் மற்றும் இலைச்சுருள் தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு 70மூ மானிய அடிப்படையில் வழங்கப்பட்டது. இது தொடர்பாக நடாத்தப்பட்ட 06 பயிற்சி வகுப்புக்களில் 126 பயனாளிகள் பங்குபற்றி பயன்பெற்றனர் திட்ட மொத்த செலவீனம் - ரூபா 4.07 மில்லியன்.

| பிரதேச செயலக பிரிவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கரைச்சி | 59 |
| பூநகரி | 15 |
| கண்டாவளை | 21 |
| பச்சிலைப்பள்ளி | 20 |




**உண்மை விதை பாவித்து சின்ன வெங்காயச் செய்கையை மேம்படுத்தல்.**

